
"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

சைவ முன்னேற்றச் சங்கம் UNITED KINGDOM கலசம்

# கலசம்
# KALASAM

SAIVA MUNNETTA SANGAM 21.8.77 UNITED KINGDOM

ஆடி - ஆவணி - புரட்டாதி 2010



**'நற்கதி அருள்வாய் அம்மா'**

ஈலிங் ஸ்ரீகனகதுர்க்கை அம்பாள்

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்


Veena's @ barkingside
Indian Shopping made easy
English & Tropical food
NEWLY OPENED
Wide range of products
Many more offers in store
Fresh Vegetables
Frozen foods
Wide range of Asian Foods
Veena's
Veena's
77-79, High Street, Barkingside, Essex IG6 2AF
Tel: 0208 550 2700
www.veenas.com

மணி 18

# கலசம்
# KALASAM

ஒலி 67

www.smsuk.info
E-mail: kalasam@gmail.com

## தேர்த் திருவிழா

திரு அண்ணாமலையில் கோபுரத்தின் மேலே ஏறி உயிர்விட முயன்ற அருணகிரிநாதரை, அஞ்சேல் என்று அருளி, அழகான திருப்புகழ் பாடல்கள் பாடவைத்தவன் முருகன். "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்று பாடிப்போந்தார் அவர்.

கச்சியப்ப சிவாசாரியார் கந்தபுராணம் பாடி அரங்கேற்றுவதற்கு முருகன் துணை நின்றான் என்பது புராண வரலாறு. அவருக்கு அடியெடுத்துக் கொடுத்தது மட்டுமன்றி, அரங்கேற்றத்தில் சான்றோர் இலக்கணத்தில் எழுப்பிய ஐயத்தையும் தீர்த்தவர் முருகன்.

குமரகுருபரர் சுவாமிகள் பேசாத குழந்தையாய் இருந்தபோது அவரை மடை திறந்த வெள்ளம்போலப் பிள்ளைத் தமிழ் பாட வைத்தவர் முருகன். அதே போன்று முத்துஸ்வாமி தீக்ஷிதருக்கும் பேச அருள்புரிந்தவன் முருகன். அதனாலேதான் தன் சாகித்தியங்களில் எல்லாம் 'குருகுஹ' என்று முத்திரை வைத்தார் தீக்ஷிதர்.

நக்கீரர் சிவபூசை செய்துகொண்டு இருந்தபோது மரத்திலிருந்து வீழ்ந்த இலை அவரின் தியானத்தைக் கலைத்ததால் பூதத்தின் சிறையில் அகப்பட்டார். அங்கிருந்து திரு முருகாற்றுப்படை பாடி தன்னை மட்டுமன்றி அங்கிருந்த ஏனையோரையும் விடுதலை யாக்கினார்.

தேவர்கள் பட்ட துன்பத்தை நீக்கவெனச் சூரன் உடலற வேலை விட்டவர் முருகன். இத்தனை சிறப்பு வாய்ந்த முருகன் தமிழ்க் கடவுளென்று போற்றப்படுகிறார். இலண்டனில் கிழக்குப் பக்கம், ஈஸ்ற்ஹாம் என்ற இடத்தில் உள்ள அழகான கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ முருகன் இந்த ஆகஸ்டு மாதம் எட்டாந்திகதி தேர் பவனி வந்து மக்களுக்குக் காட்சி கொடுக்கிறார்.

அதே தினம் லண்டனின் மேற்குப் புறத்தில் ஸ்ரீ கனகதுர்க்கை அம்பாளும் தேர்ப் பவனி வருகிறார்.

தேர்த் திருவிழா இறைவனின் ஐந்தொழில்களில் அழித்தல் தொழிலைக் குறிக்கும் என மறைகள் பறையும். தேர்த்திருவிழாவைத் தரிசிப்பது புண்ணியம் என்றும் அவை சொல்லும். எனவே மக்கள் தேருக்குப் போக விரும்புவது இயற்கையே. இதனால் ஒரே நாளில் ஒரே ஊரில் இரண்டு தேர் உற்சவம் நடைபெறுவது மக்களுக்கு மனக் கஷ்டத்தைக் கொடுக்கும். காலநிலையைக் கருத்திலே கொண்டு பல கோயில்களும் கோடைகால ஞாயிற்றுக்கிழமை களிலேயே உற்சவங்களை நடத்த விரும்புகிறார்கள். தருமசங்கடத்து உள்ளாவோர் அடியார்கள் மட்டுமே. தருமகர்த்தாக்கள்தான் இதற்கு விடையளிக்கவேண்டும்.

\- ஆசிரியர்

**நிர்வாகக் குழு:** திரு. க. ஜெகதீசுவரன் (ஆசிரியர்) திரு. ச. ஆனந்ததியாகர் திரு. சி. தம்பு
திரு. சி. அற்புதானந்தன் திரு. வ. இ. இராமநாதன் திரு. சு. வைத்தியநாதன்

**தொடர்பு முகவரி:** SMS 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732

# இந்த இதழில்

ஐந்தும் எட்டும் 03

ஆளுடையபிள்ளை - பெரியபுராணத்தொடர் 07

அன்பு வைத்தவரின் கடமை - கந்தபுராணச் சிந்தனைகள் 09

பழையாறும் திருப்பைஞ்ஞீலியும் - நாவுக்கரசர் அற்புதங்கள் 11

தேவாரத்தில் மந்திகள் 13

ஸ்ரீ கனகதுர்க்கையின் கடைக்கண் பார்வை 22

படித்தவர் பகன்றவை 27

ஆசௌச விளக்கம் 30

மதுரா - முத்தித்தலங்கள் (பயணக்கட்டுரை) 27

கண்ணனும் தாத்தாவும் 36

திருக்குறள் 40

Hinduism in search of Answers 42

# ஐந்தும் எட்டும்

(முனைவர் சீர்காழி வி.இராம்தாஸ்)

> *"A rational man cannot live without a religion, precisely because reason is characteristic of his nature. Without religious root there can be no real sincere morality just as without roots there can be no real flower."*
>
> -Count Leo Tolstoy
> (Essays and Letters)

**சமயமின்றி வாழ்க்கையில்லை**

இன்றைக்கு ஏறத்தாழ 20,000 ஆண்டுகட்கு முற்பட்டதாய், இன்று வரை உயிர்ப்பு ஆற்றல் உடையதாய், நிலவி வரும் பழம்பெரும் சமயம் சைவ சமயமே என்று சர்ஜான் மார்ஷல் என்ற அறிஞர் கூறியுள்ளார்.

திருவள்ளுவர் எல்லாச் சமயங்களும், மக்களும், உடன்படத்தக்க வகையில் திருக்குறளை இயற்றியுள்ளார் எனப் பலரும் பொதுவாகக் குறிப்பிடுவது உண்டு. இதனால் இது பொதுமறை என்றும் கூறப்படுகிறது என்பதனைப் பேரறிஞர் டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் குறிப்பிடுகிறார்.

(Religion and culture. P.27)

திருவள்ளுவர் காலத்தில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம் எனும் சமயங்கள் மட்டுமே தமிழகத்தில் பரவியிருந்தன என்பது தெளிவாகிறது. மனிதன் சமய உணர்வின்றி வாழ இயலாது என்பதை **டால்ஸ்டாய்** உறுதியாகக் கூறுகிறார்.

**தொன்மையானது**

திராவிட இனத்தின் உன்னதமான தத்துவ உருவாக்கமே தென்னிந்திய தமிழ்ச் சமயமான சைவசித்தாந்தமாகும் என்பது **ரெவரண்ட் டாக்டர் ஜி.யூ.போப்** அவர்களின் முடிவாகும். சைவத்தின் முழுமுதற் கடவுள் சிவன். சிவன் என்றால் செம்பொருள், சிறந்தது என்றெல்லாம் பொருள் கொள்ளலாம். சைவம் தொன்மையானது.

**சைவமும் திருக்குறளும்**

திருக்குறள் சைவ சமய நூலாகும். 133 அதிகாரங்கள் கொண்ட திருக்குறளில் முதல் அதிகாரமே கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ளது.

அதில் முதல் எட்டுக் குறட்பாக்களில் சிவனை, ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், இறைவன், ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன் என்று எண்பண்புகளை விளக்கி, ஒன்பதாவது குறட்பாவில் அவற்றைத் தொகுத்து எண்குணத்தான் என்றும் குறிப்பிடுகிறார். எட்டு என்ற எண் பயின்று வந்துள்ள ஒரே குறள் இதுவாகும்.

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" - (9)

### எண் பண்புகள்

அன்பு, அறிவு, பணிவு, ஒழுக்கம், இன்சொல், வீரம், அறம், புகழ் எனும் எட்டுக் குணங்களைக் கொண்டவன் இறைவன் என்று குறிப்பிடுகின்றனர். பரிமேலழகர் தமது உரையில் எண் குணங்களை விளக்குகையில்,
1. தன்வயத்தினனாதல் 2. தூய உடம்பினனாதல் 3. இயற்கை உணர்வினனாதல்
4. முற்றுமுணர்தல் 5. இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல் 6. பேரருளுடைமை
7. முடிவில்லாத ஆற்றலுடைமை 8. வரம்பில்லாத இன்பமுடைமை
என்று குறிப்பிடுகிறார்.
பரிதியார் தமது விளக்கத்தில் எட்டைக் கூறுகிறார். அவை
அனந்த ஞானம், அனந்த வீரியம், அனந்த குணம், அனந்த தரிசனம், நாமமின்மை, கோத்திரமின்மை, அவாவின்மை, அழியாவியல்பு என்பனவாம்.

### எட்டின் சிறப்பு

பொதுவாக எண்களில் எட்டு என்பதைச் சிக்கலானதாகக் கருதிடும் வழக்கம் நடைமுறையில் உள்ளது. எனினும் அஷ்ட லட்சுமி, அஷ்ட திக்குகள், அஷ்டமா சித்திகள், அஷ்டதிக் கஜங்கள், அஷ்ட மங்கலம், அஷ்டாங்க யோகம், அஷ்ட வசுக்கள், அஷ்ட தாளம், அஷ்ட வாரணம், அஷ்ட தாதுகள் என்பனவும் இவை போன்றவையுமுள்ளன. அஷ்ட லோகம் எனப்படும் அஷ்ட தாதுவில் தங்கம், வெள்ளி இரும்பு, தகரம், காரீயம், தாமிரம், துத்தநாகம், பாதரசம் கொண்ட உலோகக்கலவை வழிபடு மூர்த்திகள் (சிலைகள்) உருவாக்கிட உதவுகின்றது.

### எட்டானவன்

எண்ணத் தகுந்த குணங்களைக் கொண்டவன், எளிமையாகிய குணம் வாய்ந்தவன் என்று கூறப்படும் இறைவனை எட்டுப் பொருள்களின் வடிவமாகவும் சைவம் காணுகின்றது. நிலம், நீர், காற்று, நெருப்பு, வான், கதிரவன், நிலவு, உயிர் (ஆன்மா) ஆகிய எட்டுப் பொருள்களின் வடிவமாக இறைவன் நீக்கமற நிறைந்திருக்கிறான். இதனை **அஷ்ட மூர்த்தம்** என்று சைவசமயம் நூல்கள் கூறுகின்றன.

**"நிலம் நீர் நெருப்பு உயிர் காற்று**
**நீள் விசும்பு நிலாப் பகலோன்**
**புலனாய மைந்த னோடு எண்வகையாய்ப்**
**புணர்ந்து நின்றோன்......... "**

என்று திருவாசகமும்,

**"இரு நிலனாயத் தீயாகி நீரும் ஆகி**
**இயமானனாய் எறியுங் காற்றும் ஆகி**
**அருநிலைய திங்களாய் ஞாயிறு ஆகி**
**ஆகாயமாய் அட்டமூர்த்தி ஆகி......... "**

என்று திருத்தாண்டகமும் போற்றுகின்றன.

### ஐந்தவித்தான்

பொறிகள் ஐந்தாகும். மெய், வாய், கண், மூக்கு, செவி, எனும் ஐந்து பொறிகளை வழியாகவுடைய ஐந்து அவாவினையும் அறுத்தானது மெய்யான ஒழுக்கநெறியின் கண் வழுவாது நின்றார், பிறப்பின்றி எக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ்வர் என்று பரிமேலழகர் விளக்கம் தருகிறார்.

பொறி என்பது மெய், வாய்,கண், மூக்கு, செவி எனும் ஐந்து பொறிகளாம். ஐம்பொறிகளையும் அகத்தடக்கி இறைவனது உபதேச முறைமையாகின்ற நல்லொழுக்கத்தின்கண் வழிபட்டு நின்றவர் முத்தராவர்.

**திருமுகங்கள்**

சதாசிவப் பெருமானின் திருமுகங்கள் ஐந்து என ஆகமங்கள் கூறுகின்றன. உச்சி முகம், கிழக்கு முகம், தெற்குமுகம், வடக்கு முகம், மேற்கு முகம் ஆகிய இவ்வைந்து முகங்களிலிருந்து ஐந்து ஐந்து வடிவங்களாகத் தோன்றிய இருபத்தைந்து வடிவங்களும் போற்றப்படுகின்றன. அப்பர் பெருமானும் ஆரூர்ப் பெருமானைப் பாடும் போது,

**"ஐயைந்தின் அப்புறத்தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே"** என்கிறார்.

திருஅங்கமாலையில் அப்பர் பெருமான், தலையே நீ வணங்காய், கண்காள் காண்மின்களோ, செவிகாள் கேண்மின்களோ, மூக்கே நீ முரலாய், வாயே வாழ்த்து கண்டாய், நெஞ்சே நீ நினையாய் நிமிர் புன்சடை நின்மலனை என்றும் பாடுகிறார்.

**மலர்கள்**

நம் முன்னோர்கள் சில மரபுகளைப் பின்பற்றியே மலர்கொண்டு பூசனை செய்து வந்தள்ளனர். அவற்றுள் எண்(எட்டு) மலர்கள் கொண்டு வழிபடுவதும் ஒன்றாகும்.

அப்பர் பெருமானின் அருள் வாழ்வில் அரிய ஒரு திருப்பத்தை அளித்த திருத்தலம் திருவதிகை வீரட்டானம். இத்தலத்து இறைவனை எண் மலர்கள் கொண்டு வழிபாடு செய்ய வினைகள் விலகிப் போகும் என்பதனைப் பதிகம் முழுவதிலும் பாடியுள்ளார். ஆகம விதிகளின்படியும் வழிபாட்டின் இறுதியில் கிரியையாக எட்டு மலர்கள் கொண்டு பூசிப்பது சிறப்பாகும்.

**"எட்டு நாண்மலர் கொண்டவன் சேவடி**
**மட்டலர் இடுவார் வினை மாயுமால்**
**கட்டித்தேன் கலந்தன்ன கெடிலம்வீ**
**ரட்டனார் அடி சேரும் அவருக்கே."**

(திருமுறை 5-5-41)

எட்டு மலர்களின் பெயர்களைக் கூறிடும் 'புட்பவிதி' பாடலைக் காண்போம்

**"இலகிய புன்னை வெள்ளெருக்குச் சண்பகம்**
**நிலவிய வலம்புரி நீலம் பாதிரி**
**அலரி செந்தாமரை அஷ்ட புஷ்பமாம்**
**புலரி அம்போதொடு எப்போழுதும் சாத்தலாம்."**

என்று எண் குணத்தானை எண்மலர் கொண்டு வழிபட வேண்டியதை வலியுறுத்துகிறது.

**எண் குண மலர்கள்**

| | |
|---|---|
| புன்னை- கொல்லாமை | வெள்ளெருக்கு- அடக்கம் |
| சண்பகம்- பொறுமை | பாதிரிப்பூ- தவம் |
| நந்தியவர்த்தம் (வலம்புரி) - அன்பு | அலரி-சத்தியம் |
| நீலோற்பவம்- தியானம் | தாமரை-அறிவு |

எட்டு மலர்களைக் கொண்டு இறைவனை வழிபாடு செய்தால் எல்லா நலன்களும் பெற முடிகிறது. எண்ணிக்கையில் குறைவு ஏற்படல் கூடாது. அப்படி ஏற்படின் பொன்னாலான மலர்களால் பூசித்து சரி செய்ய வேண்டும் என்று புட்பவிதி (25) கூறுகின்றது. திருமால் தாமரை மலர்களால் சிவனைப் பூசித்தபோது எண்ணிக்கையில் ஒரு மலர் குறைந்தது. தனது கண் மலரை எடுத்து ஈடு செய்து, சிவனருள் பெற்று, கமலக்கண்ணன் ஆனார்.

**ஐந்தும் எட்டும்**

கோள்களாகிய நவக்கிரகங்களும், புலன்களாகிய கண், வாய், மூக்கு, செவி, மெய், எனும் ஐம்புலன்களும் இருந்தாலும் பயன் இல்லை, எட்டுக் குணங்களுடைய சிவனது சிவந்த தாளை வணங்காத தலை சித்திரத்தில் எழுதிய மரப்பாவைக்கு நிகராகும் என்பது பரிதியாரின் வாக்காகும்.

"ஆக்கையால் பயன் என்? அரன் கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத
இவ் ஆக்கையால் பயன் என்?"

தன்னைத் தானே இறைவனுக்கு அர்ப்பணம் செய்தலே நிவேதனமாகும். உடலுறுப்புக்கள் எல்லாம் இறை வழிபாட்டிற்கே என்று வாழ்வோம்.

## சிதம்பரத்தில் சிவதீக்ஷை

திருவருளும் குருவருளும் துணைநிற்க, **சிவாகமச் செந்நெறி வழிபாட்டு மன்றத்தினர்** மூன்றாவது ஆண்டாக **திருவாசக மாநாடும் சிவதீக்ஷை வழங்கும் விழாவும்** ஏற்பாடு செய்துள்ளனர். **'அரனருள்'** ஏற்பாட்டில், இவ்விழா ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ நடராஜப்பெருமான் எழுந்தருளியுள்ள சிதம்பரம் என்னும் புண்ணிய இடத்தில், எதிர்வரும் அக்டோபர் மாதம் 4, 5, 6 திகதிகளில், திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாள்கள் நடைபெறவுள்ளது. அச்சமயம் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம், திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள், வேளாக்குறிச்சி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் ஆகிய சந்நிதானங்கள் ஆசியுரை வழங்குவார்கள்.

**விழாவிலே கலந்துகொள்ளும் சிவனடியார்கள் அனைவருக்கும் மூன்று நாள்களும் திருவமுது படைத்தலும் நடைபெறும்.**

சைவராகப் பிறந்தவர் ஒவ்வொருவரும் சிவதீக்ஷை பெறவேண்டும் என்பது சைவசமய விதியாகும். அதை ஊக்குவிக்கும் வகையில் இந்த விழா நடப்பது போற்றப்படவேண்டிய விடயம். தீக்ஷை பெற விரும்புபவர்களுக்கும், இதுவரை தவிர்க்கமுடியாத காரணங்களால் தீக்ஷை பெறாதவர்களும் பெற்றுக்கொள்ள இது நல்ல தருணமாக அமைகிறது.

**வெளிநாட்டி[illegible]ந்து சென்று கலந்துகொள்பவர்களுக்கும் தங்கும் இடமும் உணவும் இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

சிவதீக்ஷை பெற விரும்புவோரும் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்விக்கும் புண்ணியத்தில் பங்குபற்ற விளைவோரும் அமைப்பாளருடன் தொடர்பு கொள்ளவேண்டும்.

**தொலைபேசி: 0091442378233** **மின்னஞ்சல்: aranarul@yahoo.co.in**



Black

நாவுக்கரசு பெருமானுடன் தலயாத்திரை மேற்கொண்டிருந்த காலத்தில் இருவரும் ஒரு சமயம் திருவீழிமிழலை வந்திருந்தனர். அவ்வூரில் மழை பொய்த்ததால் விளைவு குன்றி ஊர்மக்கள் பட்டினியில் வாடினார்கள். இவர்கள் இருவரதும் கனவில் தோன்றிய இறைவன் மக்கள் பசிதீர்க்கும் பொருட்டு இருவருக்கும் படிக்காசு தருவதாகத் தெரிவித்தார். அவ்வாறே இருவரும் படிக்காசு பெற்று பஞ்சம் நீங்கும் வரை மக்கள் பசிதீர உணவளித்து வந்தனர். இருவரும் பின்னர் திருமறைக்காடு சென்றனர். அப்பதியின் வேதாரண்யேசுவரர் கோயில் பிரதான கோபுரவாயில் கதவு பலகாலமாகத் திறக்கப்படாமல் அடைக்கப்பட்டிருந்தது. சுவாமிதரிசனம் செய்வதற்காக மக்கள் வேறொரு சிறிய வாசல் அமைத்து அதன் வழியே போய் வந்தனர். சம்பந்தரும் அப்பரும் அங்கு வந்தபோது சம்பந்தர் 'நாம் பிரதான வாயில் வழியாகவே உட்சென்று சுவாமி தரிசனம் செய்வோம். கதவு திறக்கும்படி தாங்கள் பாடியருள வேண்டும்' என அப்பர் சுவாமிகளைக் கேட்டுக் கொண்டார் அவரும் "பண்ணின் நேர் மொழியாள்" எனத் தொடங்கும் பதிகம் பாட, கதவு தானே திறந்து கொண்டது. இருவரும் சந்நிதி சென்று தொழுது வாயில் வழியாகவே வெளியே வந்தனர். அப்போது அப்பர் பெருமானார் கதவு மூடிக்கொள்ளும் படி பதிகம்பாடும் வண்ணம் சம்பந்தரை வேண்டினார். அவரும் "சதுரம் மறை தான்" என்னும் பதிகம் பாட கதவு தானே மூடிக்கொண்டது. அன்றில் இருந்து அடியவர்கள் யாவரும் அந்தப் பிரதான வாயில் வழியாகச் சென்று வரக்கூடியதாக அமைந்தது.

# ஆளுடைய பிள்ளை

- மு.சிவராசா (பெரிய புராணத் தொடர்)

திருமறைக்காட்டில் இருவரும் தங்கியிருந்த காலத்தில் மதுரை மன்னன் பாண்டியனும் நாட்டு மக்களும் சமண சமயம் சார்ந்து, சைவசமயம் தாழ்நிலையுற்று இருந்தது. பாண்டிமாதேவியும் அமைச்சர் குலச்சிறையாரும் சைவம் புத்துயிர் பெற்றுத் தழைக்க வேண்டுமெனப் பேரவா கொண்டிருந்தனர். அதற்காக ஞானசம்பந்தரை மதுரைக்கு எழுந்தருளக் கோரி தூதுவரை அனுப்பியிருந்தனர். கோரிக்கைக்கு இசைந்த சம்பந்தர் புறப்படும்போது அப்பர் சுவாமிகள் அந்தச் சமயத்தில் நாளும் கோளும் நன்னிலையில் இல்லை என்று சம்பந்தரின் புறப்பாட்டைத் தடுத்தார். பதிலாக சம்பந்தர் "பரவுவது நம் பெருமான் கழல்களை என்றால் பழுது அணையா" எனக் கூறி அவரைச் சமாதானப்படுத்தி மதுரை சென்றார். அப்போது அவர் அருளியது தான் "வேயுறு தோளிபங்கன்" எனத் தொடங்கும் கோளறுபதிகம்.

மதுரையில் அவரை அரசியாரும் மந்திரியாரும் வரவேற்று ஒரு மடத்தில் தங்க வைத்தனர் சம்பந்தர் வரவால் தம் சமயத்துக்கு ஆபத்து வந்ததெனப் பயந்த சமணர்கள் மன்னன் சம்மதத்தோடு மடத்துக்கு தீ வைத்தனர். தீ பரவும் முன்னரே சம்பந்தர், "செய்யனே திருஆலவாய் மேவிய ஐயனே" எனத் தொடங்கும் திருப்பதிகம் அருளிச் செய்து பாண்டிய ராசனுக்கு வெப்பு நோய் உண்டாகும்படி செய்தார். பலவேறு வைத்தியங்களுக்கும் குணமாகாத நிலையில் மன்னவன் ஒப்புதலோடு சீர்காழிப் பிள்ளையார் வரவழைக்கப்பட்டார். வந்தவர் "மந்திரமவது நீறு" என்ற திருநீற்றுப் பதிகம் பாடி நீறு சாத்த மன்னன் நோய் தீர்ந்தது. அதன் பின் சம்பந்தப் பெருமானுக்கும் சமணக் குருமாருக்கும் இடையில் சமயவாதம் நடந்தது. தத்தம் சமய உண்மைகளை ஏட்டில் எழுதி நெருப்பிலும் வைகை ஆற்றிலும் இட்ட போது சம்பந்தர் விடுத்த ஏடு எரியாமலும், வைகை நீரோட்டத்துக்கு எதிராகவும் போக, சமணர் இட்ட ஏடு சாம்பராயும்



Black

ஆற்றுநீரோடு அடித்துச் செல்லவும்பட்டதால் வாதில் சமணர் தோற்றவராயினர். பாண்டிய மன்னவன் சைவசமயம் தழுவினான். கூன்பாண்டியனாய் இருந்த பாண்டிய மன்னன் சம்பந்தர் வாழ்த்தினால் கூன்நிமிர்ந்து நின்ற சீர் நெடுமாறன் ஆனான். பாண்டி நாட்டில் மீண்டும் சைவசமயம் புத்துயிர் பெற்றது. ஞான சம்பந்தர் அந்நாட்டுச் சிவத்தலங்கள் பலவற்றையும் தரிசித்து அடுத்தடுத்த நாடுகளையும் கடந்து தொண்டை நாடு வந்தார்.
தொண்டை நாட்டில் மயிலாப்பூர் என்னும் பதியில் சிவநேசச் செட்டியார் என்பவர் இருந்தார். அவர் மகள் பூம்பாவை ஞானசம்பந்தர் பற்றிய விடயங்களை அறிந்த செட்டியார் தமது மகளை அவருக்கே மணஞ்செய்து கொடுக்க எண்ணியிருந்தார். ஆனால், கன்னிப் பருவத்திலேயே அவள் பாம்புதீண்டி இறந்து போனாள். உடலைத் தகனம் செய்து சாம்பரை ஒரு கலசத்தில் சேமித்து வைத்தார் செட்டியார். மயிலாப்பூர் வந்த சம்பந்தரைச் செட்டியார் வரவேற்று வணங்கினார். பூம்பாவை பற்றிய விவரம் அறிந்த சம்பந்தர், சாம்பர் பொதிந்த கலசத்தை கபாலீஸ்வரர் கோயிலுக்கு எடுத்துவரச் செய்து "மட்டிட்ட புன்னை" என்ற திருப்பதிகத்தை அருளினார். சாம்பர் பழையபடி தேகம்கொண்டு உயிர்பெற்று பூம்பாவையாக எழுந்தது. அவளை மணந்து கொள்ளும்படி வேண்டிய செட்டியாரின் கோரிக்கையை, தாம் உயிர்ப்பித்த பெண் தன் மகளேயாவாள் எனக்கூறிச் சம்பந்தர் நிராகரித்தார். தொடர்ந்தும் பல தலங்களையும் தரிசித்து வந்த சண்பையாளி சீர்காழி சேர்ந்தார். வயது பதினாறு ஆயிற்று அவருக்குத் திருமணம் செய்விக்க பெற்றோரும் மற்றோரும் விரும்பினர். முதலில் மறுத்த சம்பந்தர் பின்னர் இறைவன் திருவுள்ளம் அதுவானால் நடக்கட்டும் எனச் சம்மதம் தெரிவித்தார். திருநல்லூர் பெருமணத்து நம்பியாண்டார் நம்பி என்பாருடைய மகளை இவருக்குத் திருமணம் செய்வதென நிச்சயிக்கப்பட்டது.

திருநீலநக்கர் திருமணச் சடங்குகளை நடாத்தினார். மணவறைக்கு முன்னால் யாகாக்கினி கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. மணமக்கள் நெற்பொரியை அக்கினியில் ஆகுதி யாக்கினர். சம்பந்தர் மணமகளின் கையைப் பற்றிய வண்ணம் அக்கினியை வலம் வந்தனர். அந்நேரம் யாவரும் விரும்பும் அக்கினியாய் உள்ளவரும் சிவனே என்ற தெளிந்த உள்ளத்தோடு இவளுடன் இவ்வாழ்க்கையில் ஈடுபட நேருவதைத் தவிர்த்து இவளுடன் சிவன் தாள் சேரும் ஆர்வம் கொண்டார். திருநல்லூர்ப் பெருமண இறைவனை நினைந்து "கல்லூர்ப் பெருமணம்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தை அருளிச் செய்ய, அவ்விடத்து ஓர் ஒளி தோன்றியது. அத்துடன் 'நீயும் உன் திருமணம் காண வந்தவர் அனைவரும் இச்சோதியுள் புகுந்து என் பதம் அடையுங்கள்' என்றோர் அசரீரி வாக்குக் கேட்டது. "காதலாகி கசிந்து கண்ணீர்மல்கி" என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தை ஓதி அசரீரி வாக்கின் பிரகாரம் அனைவரையும் சோதியுள் புகவிட்டு ஈற்றில் கைப்பிடித்த கன்னியுடன் ஞான சம்பந்தரும் சோதியுள் புகுந்து சிவபெருமான் திருவடி அடைந்தனர். இவ்வளவில் சோதி தணிந்தது. பெருமணக் கோயில் மீண்டும் தோன்றியது. திருஞான சம்பந்தர் இறைவன் திருவடி சேர்ந்த நாள் வைகாசி மூல நட்சத்திர நன்னாளாம்.

**காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி**
**ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது**
**வேத நான்கினும் மெய்பொருள் ஆவது**
**நாதன் நாமம் நமச்சி வாயவே.**

திருச்சிற்றம்பலம்

# அன்பு வைத்தவரின் கடமை

## கந்தபுராணச் சிந்தனைகள்

சிந்திப்பவர்: முனைவர் சங்கரப்பிள்ளை சிவலோகநாதன்

வாழ்க்கையில் ஒருவரிடம் மிகவும் அன்புடன் பழகி வருகிறோம். அவர் வாழ்க்கையிலே மிகவும் வேகமாக முன்னேறுகின்றார். அவரோடு சேர்ந்து நாமும் முன்னேறுகிறோம். மிகவும் வசதியாக வாழ்ந்து வருகிறோம். இந்நிலையிலே நம்முடைய அன்புக்குரியவருக்குக் கோபம் வரும்படியாக இன்னொரு பெரியவர் நடந்து கொள்கிறார். அந்த நடத்தையைத் தன்னுடைய மானத்துக்கு விட்ட சவாலாக நாம் அன்பு வைத்தவர் கருதுகிறார். எந்த அழிவு வந்தாலும் பரவாயில்லை என்று எதிர்க்கக் கிளம்புகிறார். மற்றவர் அவ்வாறு நடந்து கொண்டதற்கு காரணம் என்ன? நாம் ஏதாவது பிழையாக நடந்து கொண்டோமா? என்றெல்லாம் அவர் சிந்திக்கவில்லை. நாம் செய்ய வேண்டியது என்ன? அவருக்கு ஒரு அற்ப சந்தோஷம் வரும்படியாக அவருடைய கோபத்தை மேலும் தூண்டிவிடுவது நல்லதா? அல்லது அவரைத் தடுத்து அவரின் பிழைகளைச் சுட்டிக்காட்டிச் சில வேளைகளில் (பெரும்பாலும்) அவருடைய கோபத்துக்கு ஆளாவது நல்லதா? இது நமக்கெல்லாம் வாழ்க்கையில் வரும் பிரசினைகளில் ஒன்று. கந்தபுராணம் காட்டும் சைவத்தமிழ்க் கலாசாரம் பின்வருமாறு சொல்கிறது.

“செல்வம் பெற்றிருக்கும் காலத்தில் உண்டாகும் சினமானது கற்றவரின் அறிவைக் கூடப் பேதப்படுத்திவிடும். ஆதலால் சினம் கொள்வதற்கு முன்னமே அவர்களிடம் அன்புடையவர் உண்மையானவற்றை எடுத்துக்கூறித் தெளிவாக்க வேண்டும்.”

**பெற்றிடு திருவினில் பிறந்த வெஞ்சினங்**
**கற்றவர் உணர்வையுங் கடக்கும் அவனது**
**முற்றுறு கின்றதன் முன்னம் அன்பினோர்**
**உற்றன கூறியே உணர்த்தல் வேண்டுமால்.**

சூரன் அமைச்சியற் படலம் 91

இவ்வாறு கந்தபுராணம் ‘உற்றன கூறி உணர்த்தலை’ அன்பு வைத்தவரின் தலையாய கடமையாகச் சொல்கிறது. இனிச்சம்பவத்தை நோக்குவோம்.

வீரவாகுதேவரைச் சூரனிடம் தூதாக அனுப்புகிறார் முருகப்பெருமான். ‘தேவர்களின் சிறையை நீக்க வேண்டும். அல்லது யுத்தத்துக்கு ஆயத்தம் செய்ய வேண்டும்’ என்பது தான் செய்தி. செய்தியைக் கொண்டு வந்த வீரவாகுதேவரைச் சிறையிட முயல்கிறான் சூரபன்மன். சூரனுடைய ஆட்களுக்கும் வீரவாகு தேவருக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பில், சூரனின் மகன் வச்சிரவாகு, வீரவாகு தேவரால் கொல்லப்படுகிறான். சூரபன்மனின் தலைநகரான மகேந்திரபுரிக்கும் அழிவுகள் பல செய்து விட்டு வீரவாகு தேவர் போய்விடுகிறார். சூரன் தன்னுடைய துணைவரைக் கூட்டுகிறான். தருமகோபன், பானுகோபன், இரணியன், சிங்கமுகாசுரன் எல்லோரும் பங்குபற்றுகின்றார்கள்.

மந்திராலோசனை தொடங்குகின்றது. ‘அநுபவிக்கின்ற செல்வத்தாலும், வன்மையாலும், தந்திரத்தாலும் எவ்வளவுதான் பெரியவரானாலும் ஒரு சினத்தோடு கூடிய கருத்தைச் செய்யும் போது தம்முடைய மெய்யான துணைவருடன் கலந்தாலோசித்த பின்னரே செய்வர். ஆதலால் உங்கள் கருத்துக்களைத் தெரிவியுங்கள்.’ என்று சூரன் கேட்கிறான். எருமையின் முகத்தையுடைய மகிடன், துர்க்குணன், தருமகோபன், பானுகோபன், எரிமுகன், இரணியன் என எல்லோருமே முருகப்பெருமானுடன் யுத்தத்துக்குப் போய் அவரையும் பூதப்படைகளையும் அழித்து விடவேண்டும் என்ற கருத்தையே வெளிப்படுத்தினார்கள். அவர்களுக்கிடையே இருந்த வேறுபாடு எல்லாம் யார் தலைமை வகுப்பது என்பதே. சூரனுடைய பெருமைக்கு, ஒரு சிறுவனை எதிர்க்கும் படைக்குத் தலைமை தாங்குவது ஒரு இழுக்காகும் என்பதே பலரின் கருத்தாக இருந்தது. இந்த நிலையிலேதான் சிங்கமுகாசுரன், சூரனின் தம்பி, சூரன் யாக குண்டத்திலே வீழ்ந்திறந்த பின்பும் யாகத்தை நடாத்திச் சிவபெருமானை நேரே

அழைத்துச் சூரனை மீட்டெடுத்துச் சூரனுடைய பெருவாழ்வுக்குக் காரணமானவன், 'உற்றன கூறி உணர்த்துதல்' அன்பு வைத்தவரின் கடமை என்று சொல்கிறான். சிங்கமுகாசுரன் "அமைச்சரும், படைத்தலைவரும், மைந்தரும் இங்கு தங்கள் தங்களுக்குரிய வல்லமையை எடுத்துச் சொன்னார்களே தவிர உனக்குப் பொருத்தமான அறிவுரையைத் தரவில்லை என்று சொல்கிறான். மன்னரின் செவியில் தீயை நுழைத்தாற் போல் நல்வழியைத் தரும் ஒப்பில்லாத நடுவு நிலையான நீதியைச் சொன்னவரே அமைச்சர் எனப்படுவர். ஆனால் உன் துணைவர்கள் எல்லோரும் பகைவர் விரும்பியவாறே சொல்கிறார்கள். செய்து முடிக்க வேண்டிய செயல், அதன் தொடக்கம், அதன் பயன், அதற்கு வரும் இடையூறுகள், என்று இவற்றையெல்லாம் சீர்தூக்கிப்பார்த்துக் கருமமாற்றுபவரிடம் எந்த குற்றமும் வருவதற்கு இடமுண்டோ? இல்லையே.

**முற்றுற வருவது முதலும் அன்னதால்**
**பெற்றிடு பயன்களும் பிறவுந் தூக்கியே**
**தெற்றென உணர்ந்துபின் பலவுஞ் செய்வரேல்**
**குற்றமொன் றவர்வயிற் குறுக வல்லதோ.**

சூரன் அமைச்சியற் படலம் *93*

இந்திரன் முதலான அரசர்களையும், தேவர்களையும், துன்புறுத்திய தீயவர் யாராவது பிழைத்து வாழ்ந்தார்களா? தேவர்கள் எல்லோரையும் மீன்பிடித்துக் கொண்டுவருமாறு அனுப்பினாய். இவ்வாறு செய்தல் நல்லதா? இந்திரனுக்குத் துன்பத்தை ஏற்படுத்தி அவனது அரசினை அழித்தாய். அவனது நகரின் செல்வங்களை அழியச் செய்தாய். தேவர்களைச் சிறையிலடைத்தாய். அத்தகைய தேவரால் நமக்கு இத்துணை துன்பங்களும் ஏற்பட்டன என்று நீ நினைக்கவில்லையே. பித்துக்கொண்டவர் போல் மயங்கினாய். அறிவற்றவனானாய். இந்திரபுரி அழிந்த காலத்தில் இங்கு வந்த தேவர்களை நீ இன்னமும் விடவில்லை. இரக்கத்தை விட்டு விட்டாய். இதனாற் தானே முருகப்பெருமான் எம்முடன் போர் செய்ய வந்திருக்கிறார். தேவர்களைச் சிறையில் அடைத்ததனால் என்ன பயன் அடைந்தாய்? ஆகவே தேவர்களின் சிறையை விட்டுவிடு. முருகப்பெருமான் மீண்டும் கைலாய மலைக்குப் போய்விடுவார். அல்லாவிடில் அவர் எம்மையெல்லாம் கொல்வார்." இவ்வாறு சிங்கமுகாசுரன் சொன்னதும் சூரன் மிகவும் கோபங்கொண்டான். சிங்கமுகாசுரன் கூறியவற்றிற்கெல்லாம் மாற்றுத்தரம் கூறுகிறான். கடைசியாக.

'கணிப்பிற்குப் பெறுமதியற்ற சிறுவனொருன் என்னைக் கொல்வானென்று சொல்வது எத்தகையது என்றால், வானில் கதிரவனைக் கனியென்று கருதி விரும்பிக் கண்ணில்லாதவன் காட்டிட அதைக் கையில்லாதவன் சென்று பிடிக்க முயல்வதைப் போலாகும்.' என்று கூறுகிறான்.

**எண்ணி லாததோர் பாலகன் எனைவெல்வன் என்கை**
**விண்ணிலாதவன் தன்னையோர் கனியென வெ·.கி**
**கண்ணி லாதவன் காட்டிடக் கையிலா தவன் போய்**
**உண்ணி லாதபேர் ஆசையால் பற்றுமா றொக்கும்.**

சூரன் அமைச்சியற் படலம் *116*

இவ்வாறு சூரன் சொன்ன போதும் அவனுக்கு நன்மையைச் சொல்லச் சிங்கமுகாசுரன் தவறவில்லை. மேலும் பல நியாயங்களை எடுத்துக்கூறுகிறான். சூரபன்மன் கேட்கவில்லை. அந்த நிலையிலே அவன் சிந்திக்கிறான். மன்னர்க்கெல்லாம் மன்னனான சூரன், ஆறுமுகனின் வேலால் இறப்பான். அதைப்பார்த்துக் கொண்டிருப்பது பிழை. அதற்கு முன்னர் யான் இறந்து விட வேண்டுமெனத் துணிகிறான். போருக்குப் போவது என தீர்மானிக்கப்படுகின்றது. யுத்தம் தொடங்கி ஐந்து நாள்களில் சூரனுடைய தளபதிகள், அமைச்சர்கள், பிள்ளைகள் எல்லோரும் இறந்து படுகிறார்கள். சூரன் சிங்கமுகாசுரனுக்குச் செய்தி அனுப்புகிறான். சூரனிடம் வந்த சிங்கமுகாசுரன் அவனிடம் விடைபெற்று யுத்தத்திற்குச் செல்கிறான். யுத்தத்தில் சிங்கமுகாசுரன் இறக்கிறான். சூரனுக்கும் பின்வருவனவற்றை உணர்த்தி முடியாத கட்டத்திலே ஒரு வயிற்றிலே பிறந்த கடமையை முடித்து இறக்கிறான் சிங்முகாசுரன். ஒரு தலைசிறந்த குணாளன் ஆகிய சிங்கமுகாசுரன் மூலமாக "உற்றன கூறி உணர்த்தல்" அன்புடையோரின் கடமை என்பதைக் கந்தபுராணம் சொல்லா நிற்கின்றது.



# 'பழையாறையிலும் பைஞ்ஞீலியிலும் நிகழ்ந்த அற்புதங்கள்"

இடைக்காடு சயம்பு (இலண்டன்)

திருநாவுக்கரசு நாயனார் தன் பாத தலயாத்திரையைத் தொடர்ந்து பழையாறை என்னுந் தலத்துக்கு வந்து சேர்ந்தார். பழையாறை வட தனி என்னுந் தனித்தலம் பக்கமாக வந்தவர் அது இறைவர் கோயிலென்று தெரிந்து வழிபட முயன்றார். பார்த்தார். சூழல் வித்தியாசமாய் ஐயப்பாடாயிருந்தது. அங்குவந்தோர் சிலர் 'இது சிவன் கோயில்தான், சமண குருமார் இதை மறைத்துத் தமது பள்ளியாகப் பாவிக்கிறார்கள்' என்று கூறினர். நாயனாருக்கு மனம் வெதும்பிவிட்டது. தீமையை, பொய்யைக் கண்டு அஞ்சாதவரல்லவா? 'அஞ்சுவது யாதொன் றுமில்லை' என்று இறைவருக்கு விண்ணப்பஞ் செய்தார். 'நானிங்கு வழிபட்படாலன்றி உணவுகொள்ளேன்' என்று ஆணை கூறி, கோயிலின் பக்கத்தில் அமர்ந்து விட்டார். இறைவர் மன்னர் மகேந்திரபல்லவருக்கு கனவில் உணர்த்தி 'நாயனார் வழிபடச் சமணர்களை நீக்கிக் கோயிலைச் செப்பனிடுக' என்று அறிவுறுத்தினார். இந்த மகேந்திர பல்லவர் முன்னர் சமணர்கள் சொன்ன தண்டனைகளை எல்லாம் நாயானாருக்குச் செய்தவர். பின் நாயனாரை உண்மையானவர், சைவ அடியார், இறைவனுடைய முழுமையான அருளைப் பெற்றவர் என்று அறிந்து அவரிடமே தீக்ஷை பெற்று மறுபடியும் சைவனாகியவர். கனவின் பின் மகேந்திரபல்லவர் மந்திரிகளையும் அழைத்துக்கொண்டு நேரே இக் கோயிலுக்கு வந்து சமணரை ஓட்டிவிட்டுக் கோயிலைச் செம்பனிட்டு நித்திய பூசை வழிபாடுகளுக்கு நிபந்தம் கொடுத்து அன்றைக்கே நாயனாரைத் தனது வழிபாடுகளைச் செய்யப்பண்ணி, பின் நாயனாரை வணங்கி விடைபெற்றுப் போனார். பின்னர் அவர் சமணர்களைத் தண்டித்ததாக அறிகிறோம். இதை நாயனாரும் தமது தேவாரத்தில் குறிப்பிடுகிறார்.

**"தலையெ லாம்பறிக் குஞ்சமண் கையருள்**
**நிலையி னான்மறைத் தான்மறைக் கொண்ணுமோ?"**

**"வாயி ருந்தமி ழேபடித் தாளுறா**
**ஆயி ரஞ்சம ணும்மழி வாக்கினான்."**

சமணகுருமாரைக் கழுவேற்றியதோ அழித்ததோ மன்னருடைய நீதி செலுத்திய வேலை. நாயனாருக்கு அதில் பங்கில்லை. பின்னர் நாயனார் அங்கு மனமாரப் பாடல்கள் பாடி வழிபட்டார். உழவாரத் தொண்டும் செய்தார். யாத்திரையைத் தொடர்ந்தார்.

சில நாள்களில் திருநாவுக்கரசு நாயனார் திருப்பைஞ்ஞீலி என்னும் தலத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார். வழிநடந்த இளைப்போடும் பசிதாகக் களைப்போடும் இருந்த போதும் அவற்றைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்தார். நாயனார் தனித்தே யாத்திரை பண்ணுவார். நிலையாகப் பணிவிடை செய்யவோ உதவிக்கோ எவரையும் வைத்திருப்பதில்லை. எண்பது வயதை அண்மித்த காலம் என்றாலும் பசிதாகம் முதலியவற்றை சூழலுக்கேற்றபடி தீர்த்துக்

கொள்வார். இந்தப்பயணத்தில் நாயனாரின் நிலையை உணர்ந்த இறைவர் அவருக்கு ஆச்சரியமான உதவிசெய்யத் திருவுளங் கொண்டார். ஊருக்குப்புறத்தே சிறிது தூரத்தில் ஒரு சோலையையும் குளமும் அமைத்தார். (இந்தக் குளமும் சோலையும் இப்போதும் அப்படியே இருக்கின்றன. அற்புதம்!) அங்கு தானும் சிறப்பாகத் திருநீறணிந்த ஒரு அந்தணர் வேடத்தில் பொதிசோறும் வைத்துக்கொண்டு அமர்ந்திருந்தார். நாயனார் அண்மித்ததும் அந்தணர், 'அடியவரே, வழி நடந்து மிகவும் இளைத்தீர். இங்கு என்னிடம் பொதிசோறு உண்டு. அதனை நீர் உண்டு இக்குளத்தில் தூய நீரையும் பருகிக் களையாறிப் போவீராக.' என்று அருள்நோக்கம் செய்து கூறினார். நாயனாரும் அந்தணர் கூறியதை 'நம்பரருளென்றறிந்தார் போல் ..... எண்ண நினையா தெதிர்வாங்கி, இனிதாய் அமுது செய்து, இனிய தண்ணீரமுது செய்தருளித் தூய்மை செய்து தளர்வொழிந்தார்!' பசியாற அன்னவை கிடைத்ததும் 'இது இறைவர் கருணை'யென்று சாதாரண நன்றி நினைப்புடன் ஏற்றார். ஊன்றி உணரவில்லை. 'எண்ண நினையாது' என்று ஊன்றி நினையாது என்ற பொருளில் சேக்கிழார் கூறினார். ஊன்றி நினைத்திருந்தால் அவருடைய ஞான உணர்வால் அங்கு நின்ற அந்தணர் இறைவரே என்று கண்டிருப்பார். அதைப் பின்னால் அறிந்தார். நாயனார் சிறிது இளைப்பாறிய பின் அந்தணர் 'அப்பாலெங்கு நீர் போவது?' என்றார். 'அரசும் திருப்பைஞ்ஞீலிக்குப் போவதென்று உரைப்ப, ஒப்பிலாரும், யான் அங்கு போகின்றேன்' என்று உடன் போந்தார். 'யானங்கும் போகின்றேன்' என்றார். யானும் அங்கு போகின்றேன் என்று கூறவில்லை. யான் அங்கு என் இருப்பிடத்துக்குப் போகின்றேன். யானும் அங்கு போகின்றேன் என்றால் யாரோ தலயாத்திரை செய்பவரோ வழிப்போக்கரோ என்றும் பொருள் வரும். பொதி சோறு வைத்திருந்த படியால் அந்த ஊர்க்காரர் என்று ஊகிக்க இடம் இருந்தது. அந்தப் பாடலிலே பைஞ்ஞீலி இறைவர் தான் என்ற குறிப்பு இருக்கிறது. இது சேக்கிழாருடைய கவிநயம். அந்தணராகி நின்ற இறைவர் நாயனாருடன் கூடிப் பைஞ்ஞீலி நோக்கிப் போனார். தலம் (கோயில்) கிட்டியதும் மறைந்தார். அப்பொழுது நாயனார், 'என்னையும் ஒருபொருட்டாக மதித்துக் கருணை புரிந்து நாடகமாடினாரா?' என்று பாடல்கள் பாடி விழுந்து எழுந்து கண்ணீர் சோர வணங்கினார்; பேரானந்தம் பெற்றார். விரைவாகக் கோயிலுக்குச் சென்று பதிகங்கள் பாடி வணங்கினார். உழவாரத் தொண்டும் செய்து கொண்டு சில நாள்கள் அங்கு தங்கினார். நாயனார் பாடிய பாடல்களில் ஒரு பதிகம் தான் கிடைத்தது. பதிகம் பற்றிச் சுருக்கமாகப் பார்ப்போம். பாடல்.-

**உடையர் கோவணம் ஒன்றுங் குறைவிலர்**
**படைகொள் பாரிடஞ் சூழ்ந்தபைஞ் ஞீலியார்**
**சடையிற் கங்கை தரித்த சதுரரை**
**அடைய வல்லவர்க் கில்லை அவலமே.**

கோவணாண்டி போல் காட்சி கொடுத்தாலும் உண்மையில் அவர் பெருஞ்செல்வர். பாடல் 3.ஊழிக்காலக் குறிப்பு 5.புனகுறிபவக் குறிப்பு 6. தான் சமண சமயஞ் சேர்ந்து செய்த பாவத்துக்குக் கழிவிரக்கம் 10. இராவணன் பாடல். சிவாபராதம் செய்தவரும் கழிவிரக்கப்பட்டு மனமொன்றி வணங்கினால் உய்திபெறலாம் என்று உறுதிசொல்கிறார். பாடல்கள் 4, 5, 8 தவிர மற்றப்பாடல்களில் பைஞ்ஞீலியாரை வணங்கும் பயன் கூறினார். கோவணத்தைக் குறித்தே முதற்பாடல் தொடங்கினார். அங்கு சிலையில் ஏதோ சிறப்பிருக்க வேணும். இத்தலத்துத் திரு ஞானசம்பந்தர் பாடலிலும் 'ஓரிடங்குறைவிலர் உடையர் கோவணம்' என்றும் 'பாரிடம் பணி செய்யும்' என்றும் பாடினார். இந்த இரண்டு நாயன்மார்களுடைய முதற்பாடல்களிலேயும் ஒத்த மூன்று கருத்துக்களைப் பார்க்கிறோம். இது ஒரு தெய்வீக அமைப்பு. சுந்தர மூர்த்தி நாயனாரும் இங்கு சிறப்பான அற்புதப் பாடல் பதிகம் பாடினார். யாத்திரை பண்ண வேண்டிய தலம். மனனம் பண்ண வேண்டிய பதிகங்கள். யாத்திரை செய்வோர் சிலையைப் பார்த்துச் சிறப்பைக் குறிக்க.



# தேவாரத்தில் மந்திகள்

- ச. வேதநாராயணன்

தேவாரத்தில் பல உயிரினங்களைப் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. எடுத்துக்காட்டாக சில வரிகள்

**ஏனத் திரளோடு இனமான் கரடி** (சம்பந்தர் 1-069)
**கொடு நாகமோடு கரடி** (சம்பந்தர் 2-221)
**வேழத்தின் மருப்பினைக் கீழ்ந்து சிங்கம் குருகுண்ண முத்து உதிரும் கேதாரமே** (சம்பந்தர் 2-250)
**முதுவாய் ஓரி கதற முதுகாட்டு** (சுந்தரர் 7-041)
**நரி தலை கவ்வ நின்று ஓரி கூப்பிட** (சுந்தரர் 7-044)

ஆனால் வண்டுகளும், குரங்குகளும் அதிகமாகவே வருணிக்கப்படுகின்றன. மந்திகளைப்போல் செயற்பாடு, சேட்டை மிக்கவைகளாக மற்ற உயிரினங்களைக் காட்டவில்லை. இயற்கைக் காட்சிகளை வருணிக்கும்போது குரங்குகளைப் பற்றிச் சொல்லித்தான் ஆகவேண்டும்.
சம்பந்தருடைய திருக்கடைக்காப்பில்தான் மந்திகளைப் பற்றி அதிக அளவு குறிப்புக்கள் வருகின்றன. அப்பர் இருமுறையும் சுந்தரர் மும்முறையும் குறிப்பிடுகின்றனர். திருவாசகத்தில் இல்லயே இல்லை.
தேவாரக் குறிப்புக்களுடன் சிறு விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. அடைப்புக்குள் திருமுறை எண்ணும் அதன் பதிகத்தின் எண்ணும் கொடுக்கப்பட்டுள்ளன.

**மந்திகளின் கூட்டம்**

குரங்குகள் கூட்டமாக இருக்கின்றன என்று சில பாடல்கள் சொல்கின்றன. சில பாடல்களில் அவைகளின் செயல்கள் நன்றாக விவரிக்கப்படுகின்றன.

**சேற்றயன் மிளிர்வன கயலிளவாளை செருச்செய ஓர்ப்பன செம்முக மந்தி**
**ஏற்றையொடு உழிதரும் எழில் திகழ் சாரல் இடைச்சுரம்** (1-078)

திரு இடைச்சுரத்தின் மலைச்சாரலில் வயல்கள் இருக்கின்றன. பயிர் செய்வதற்குத் தொடக்கமாக வயல்களில் நீர் விடப்பட்டிருக்கிறது. அந்நீருடன் கயல் மீன்களும் வாளை மீன்களும் வயல்களுக்கு வந்துவிட்டன. அந்த வயலின் சேற்றில் அம்மீன்கள் துள்ளிக் குதிக்கின்றன. அவை தமக்குள் சண்டையிடுவதைப் போல் தோன்றுகிறது. சிவந்த முகத்தை உடைய ஒரு பெண் குரங்கு அதையே உற்றுப் பார்த்துக் கொண்டு இருக்கிறது. அந்தப் பெண் குரங்கிடம் ஆண் குரங்கு சென்று அதனுடன் கூடித் திரிகிறது.

**ஊகமொடு ஆடு மந்தி உகளும் சிலம்ப.**(2-220)

கருங்குரங்குகளும் மந்திகளும் விளையாடும் இடம் காவிரி அலைக்கும் நனிபள்ளியாகும்.

**கந்த மலர் கொந்தினொடு மந்தி பல சிந்து கயிலாய மலை** (3-326)

கயிலாயத்தில் நறுமணம் மிக்க மலர்களைக் கொண்ட மரங்கள் இருக்கின்றன. குரங்குகள் அந்த மரங்களிலிருந்து பூக்களைக் கொத்துக் கொத்தாகப் பறித்து, தம் கையில் வைத்துக்கொண்டு இங்கும் அங்குமாக ஓடிக்கொண்டு இருக்கின்றன.

**மந்தி பாய் பொழில் சூழு மாற்பேறு** (5-060)

பெண் குரங்குகள் தாவி விளையாடும் சோலைகள் சூழ்ந்த இடம் திருமாற்பேறு ஆகும்.

**மந்திகள் உண்ணுதல்**

குரங்குகள் பலவிதமான கனிகளை உண்கின்றன. தேனைப் பருகுகின்றன. அக்காட்சிகள் வருணிக்கப்படுகின்றன.

**தாறுடை வாழையில் கூழைமந்தி தகுகனி உண்டு மிண்டிட்டினத்தைப்**
**பாறிடப் பாய்ந்து பயிலும் ஆவூர்** (1-008)

ஆவூர் பதியில் வாழைத்தோட்டங்கள் உள்ளன. வாழைத்தாறில் பழுத்துள்ள பழங்கள் உண்பதற்குத் தகுதியாக உள்ளன. ஒரு குள்ளமான மந்தி முதலில் வருகிறது. தனக்குத் ஏற்ற பழங்களை வயிறார உண்கிறது. ஆனால் மீதமுள்ள பழங்களைப் பகிர்ந்து கொள்ள அதற்கு மனம் இல்லை. பழங்களைச் சாப்பிடுவதற்கு மற்றக் குரங்குகளும் வருகின்றன. இந்தக் குள்ளக் குரங்கு அவற்றை பயமுறுத்தி விரட்டி அடிக்கிறது.

**தேனார்ந்து எழு கதலிக்கனி உண்பான் திகழ் மந்தி**
**மேனோக்கி நின்று இறங்கும் பொழில் வேணுபுரம்** (1-009)

குரங்குகள் அமர்ந்து இருக்கின்றன. மேலே தேனின் சுவை பொருந்தினவாய்ப் பழுத்துத் தோன்றும் வாழைப்பழங்கள் இருக்கின்றன. ஆனால் அவை ஏறிப்பறிக்க இயலாதபடி உள்ளன. மந்திகளுக்கு அப்பழங்களை உண்ண ஆசை. ஆனால் பறிக்க முடியவில்லை. அவை ஏக்கத்துடன் மேலே நோக்கியபடியே தம் இயலாத நிலைமைக்கு வருந்துகின்றன. இப்படியுள்ள சோலைகள் சூழ்ந்த இடம் வேணுபுரம் ஆகும்.

**மலையார் சாரல் மகவுடன் வந்த மடமந்தி**
**குலையார் வாழைத் தீங்கனி மாந்தும் குற்றாலம்** (1-099)

குற்றால மலைச்சாரலில் வாழைத் தோட்டங்கள் உள்ளன. மந்தி தனது குட்டிகளுடன் வருகிறது. தேன் கதலிகள் மிகுதியாகவே உள்ளன. மந்தி அப்பழங்களைத் தன் குட்டிகளுடன் வயிறு புடைக்க உண்கிறது.

**வருக்கமார்தரு வான் கடுவன்னொடு மந்திகள்**
**தருக்கொள் சோலை தரும் கனி மாந்திய பூந்தராய்** (2-137)

பூந்தராய் பதியில் கனிமரங்கள் நிறைந்த சோலைகள் உள்ளன. அவற்றுள் குரங்குக் கூட்டங்கள் இருக்கின்றன. அப்பழங்களை ஆண் குரங்குகள் பெண் குரங்குகளுடன் கூடி வயிறார உண்டு மகிழ்கின்றன.

**பருமராமொடு தெங்கு பைங்கதலிப் பருங்கனி உண்ண மந்திகள்** (2-185)

பருத்த கடப்ப மரங்கள், தென்னை மரங்கள் , வாழை மரங்கள் உள்ள சோலைகள் சீகாழியில் உள்ளன. அங்குக் கிடைக்கும் பெரிய வாழைப்பழங்களை குரங்குகள் உண்ணுகின்றன.

**அந்தண் சாரல் கீட்பலவும் கீண்டு கிளை கிளையன் மந்தி பாய்ந்து**
**உண்டுவிண்ட கோட்பலவின் தீங்கனியை மாக்கடுவன்**
**உண்டு உகளும் குறும்பலாவே** (2-207)

குற்றால மலைச்சாரலில் பலா மரங்கள் நிறைந்துள்ளன. மந்திகள் தம் கூட்டத்தோடு வந்து, தகுந்த பலாப்பழங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைத் திறந்து சுளைகளைத் தின்னுகின்றன. மீதியுள்ள இனிய பலாச்சுளைகளை ஆண் குரங்குகள் எடுத்து உண்ணுகின்றன.

**வாழையம்பொழில் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டம்** (2-243)

வாழைத் தோட்டங்களில் பழுத்த பழங்களை உண்டு மந்திகள் களிப்புற்று மருவிய இடம் மாதோட்டம். (கேதீச்சுரம்)

**மந்தமார் பொழில் மாங்கனி மாந்திட மந்திகள் மாணிக்கம்**
**உந்தி நீர்வரு காவிரி வடகரை மாந்துறை** (2-246)

மந்திகள் மாங்கனிகளை உண்டு மகிழுமாறு அடர்ந்து வளர்ந்த மாமரங்களை உடைய இடம் மாந்துறையாகும்.

**கந்தமாய பலவின் கனிகள் கமழும் பொழில்**
**மந்தி ஏறிக் கொணர்ந்து உண்டு உகள்கின்ற மாகாளமே** (2-253)

மணம் கமழும் பலாக்கனிகளை மந்திகள் ஏறிப் பறித்து உண்டு திரியும் தோட்டங்கள் சூழ்ந்த இடம் இரும்பை மாகாளம் ஆகும்.

**வழிந்து இழி மதுகரம் மிழற்ற மந்திகள்**
**கிழிந்ததேன் நுகர்தரும் கெடில வாணரே** (4-010)

மரத்தின் கிளையிலுள்ள தேன்கூடு உடைந்து விடுகிறது. அக்கூட்டிலிருந்து தேன் ஒழுகுகிறது. அத்தேனைத் தொடர்ந்து ரீங்காரம் செய்து கொண்டு வண்டுகளும் இறங்குகின்றன. கீழே வரும் தேனைப் பெண் குரங்குகள் சுவைக்கின்றன. இந்த இடம் திருவதிகையாகும்.

**மந்திகளின் சேட்டைகள் பற்றிய வருணனைகள்**

இயற்கைக் காட்சிகளை வர்ணிக்கும்போது குரங்குகளுடைய அச்சம், அன்பு, கோபம் முதலிய உணர்வுகளையும் அவைகளின் செயல்களையும் குறிக்கும் பல பாடல்களைப் பார்க்கிறோம்.

**கைம்மகவேந்திக் கடுவனொடு ஊடிக் கழை பாய்வான்**
**செம்முக மந்தி கருவரை ஏறும் சிராப்பள்ளி** (1-098)

திருச்சிராப்பள்ளியில் உள்ள கரியமலையில் மூங்கில்கள் வளர்ந்துள்ளன. சிவந்த முகமுடைய பெண் குரங்கு தனது ஆண் குரங்கோடு ஊடல் கொள்கிறது. மந்தி உயிரை மாய்த்துக்கொள்ள நினைக்கிறது. தனது குட்டியையும் தூக்கிக்கொண்டு மூங்கிற்புதரில் பாய்ந்து மலைமீது ஏறுகிறது.

**வலம் வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்று அஞ்சி**
**சிலமந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறே** (1-130)

நடனக் கலையில் சிறந்த பெண்கள் திருவையாற்றில் உள்ளனர். அவர்கள் நடனம் ஆடுகிறார்கள். அவர்களது முழவுகள் அவர்களின் கூத்துக்கு ஏற்றாற்போல் அதிர்கின்றன. அவற்றைக் கேட்ட சில மந்திகள் வானத்தில் கேட்கும் இடியோசை என்று அஞ்சி மரங்களில் ஏறி மேகங்களைப் பார்க்கின்றன.

**மான் பாய வயலருகே மரமேறி மந்திபாய் மடுக்கள் தோறும்**
**தேன் பாய மீன் பாய செழுங்கமல மொட்டலரும் திருவையாறே** (1-130)

திருவையாற்றில் ஆற்றின் கரையில் சோலைகள் உள்ளன. அவைகளில் மான்கள் துள்ளி விளையாடுகின்றன. அவற்றைக் கண்டு மரங்களின் மேல் ஏறிய குரங்குகள் பாய்கின்றன. அப்போது மரங்களிலிருக்கும் தேன்கூடுகளிலிருந்து தேன் சொட்டுகிறது. அத்தேன் மடுக்களில் உள்ள மீன்கள் மேல் விழுகிறது. அதனால் மீன்கள் துள்ளுகின்றன. அப்போது அங்குள்ள செழுமையான தாமரை மொட்டுக்கள் அலர்கின்றன.

**கழை மேவு மடமந்தி மழைகண்டு மகவினொடும் புகவொண் கல்லின்**
**முழை மேவு மால் யானை இரை தேரும் வளர்சாரல் முதுகுன்றமே** (1-131)

உயர்ந்த மூங்கில் மேல் ஏறி அமர்ந்த மடமந்தி மழை வருதலைக் கண்டு அஞ்சித் தன் குட்டியோடும் ஒதுங்கும் மலைச்சாரலை உடைய இடம் திருமுதுகுன்றம்.

**தெங்கினூடு போகி வாழை கொத்திருத்து மாவின்மேல்**
**அங்கண் மந்தி முந்தியேறும் ஆரூர்** (2-237)

அழகிய கண்களை உடைய மந்திகள் தென்னை மரத்தின் வழியே ஏறி வாழைக் குலைகளை ஒடித்து மாமரத்தின் மேல் ஏறும் சோலைகள் நிறைந்தது திருவாரூர்.

**தாதுவிண்ட மதுவுண்டு மிண்டிவரு வண்டினம் கீதம்பாட**

**மடமந்தி கேட்டு உகளும் கேதாரமே** (2-250)

மலரின் மது உண்ட வண்டுகள் கீதம் பாட மந்திகள் கேட்டு மகிழும் இடம் திருக்கேதாரம் ஆகும்.

**மந்தி பாயச் சரேலச் சொரிந்தும் முரிந்துக்க பூக்**
**கெந்த நாறக் கிளருஞ்சடை எந்தை கேதாரமே** (2-250)

மந்தி பாய்தலால் சரேலெனத் தேனைச் சொரிந்து முரிந்து வீழ்ந்த மலர்களின் மணம் கமழும் இடம் கேதாரம் ஆகும்.

**புடைக்கொள் பூகத்திளம்பாளை புல்கும் மதுப்பாய வாய்மடுத்து**
**மந்தி உகளும் திலதைம் மதிமுத்தமே** (2-254)

தழைத்து வளர்ந்த பாக்கு மரத்தின் இளம்பாளை வழியாய்ப் பாயும் தேனை உண்டு மந்திகள் விளையாடும் இடம் திலதைப்பதியில் உள்ள மதிமுத்தமாகும்.

**பல்பல இருங்கனி பருங்கி மிக உண்டவை நெருங்கி இனமாய்க்**
**கல்லதிர நின்று கருமந்தி விளையாடு காளத்தி மலையே** (3-327)

காளத்தி மலையில் கருங்குரங்கு கூட்டங்கள் உள்ளன. பல கனி மரங்களும் அதில் இருக்கின்றன. குரங்குகள் பலவகைச் சுவை மிகுந்த பெரிய பழங்களின் சாற்றை நிறையப் பருகுகின்றன. பிறகு மலையே அதிரும்படி அவை விளையாடுகின்றன.

**கந்தமலி சந்தினொடு காரகிலும் வாரிவரு காவிரியுளால்**
**வந்ததிரை உந்தி எதிர் மந்தி மலர் சிந்தும் மயிலாடுதுறையே** (3-328)

மயிலாடுதுறையில் பாயும் காவீரி தன்னுடன் மணம் கமழும் சந்தன மரங்களோடு கரிய அகில் மரங்களையும் வாரிக்கொண்டு வருகிறது. காவிரியில் அலைகள் வருகின்றன. அந்நீர்த் திவலைகள் நாற்புறமும் பரவுகின்றன. சோலையிலுள்ள குரங்குகள் மீதும் விழுகின்றன. குரங்குகளுக்குக் கோபம் வருகிறது. அவை மரத்திலிருந்து மலர்களைப் பறித்து வீசுகின்றன.

**காவிரி நுரைத்திரு கரைக்கு மணி சிந்த வரி வண்டு கவர**
**மாவிரி மதுக்கிழிய மந்தி குதி கொள்ளு மயிலாடுதுறையே** (3-328)

மயிலாடுதுறையில் காவிரியின் அலைகள் இரு கரைகளிலும் உள்ள சோலைகளில் இரத்தினங்களைக் சிதறச் செய்கின்றன. அதைக்கண்ட மந்திகள் மரங்களிலிருந்து குதிக்கின்றன. அப்போது அங்குள்ள மாமரக் கிளைகளில் மோதுகின்றன. அம்மரத்தில் கட்டப்பட்டிருந்த தேன்கூடுகள் உடைகின்றன. கூட்டிலிருந்து தேன் சிந்துகிறது. அதனை வண்டுகள் உண்ணுகின்றன.

**முருகுவிரி பொழிலின் மண நாற மயிலால மரமேறித்**
**திருகு சின மந்தி சிந்த மதுவார் திருநலூரே** (3-341)

திருநல்லூரில் பல சோலைகள் உள்ளன. சோலைகளில் உள்ள நறுமணத்தை நுகர்ந்த இன்பத்தால் மயில்கள் ஆடுகின்றன. அவ்வாடலைக் குரங்குகள் நோக்குகின்றன. மலில்களின் ஆடலுக்குச் சோலைகள் ஒரு பரிசும் கொடுக்கவில்லையே என்று குரங்குகளுக்குக் கோபம் வருகிறது. மரங்கள் மேல் ஏறி கனிகளை உதிர்க்கின்றன. கனிச்சாறு கீழே பெருகுகிறது. அது மயிலின் ஆடலைக் கண்ட இன்பத்திற்கு ஈடாகப் பரிசு கொடுப்பது போல் இருக்கிறது.

**கொண்டல் ஆர் வந்திடக் கோலவார் பொழில்களில் கூடி மந்தி**
**கண்டவார் கழை பிடித்து ஏறி மாமுகில்தனை கதுவு கொச்சை** (3-347)

மேகங்கள் வந்தவுடன் அழகிய நீண்ட சோலைகளிலுள்ள குரங்குகள் கூடி தங்களுக்கு முன்னே காணப்படுகின்ற மூங்கில்களைப் பற்றி ஏறி அந்தக் கரிய மேகங்களைக் கையால் பிடிக்கின்ற இடம் கொச்சைவயம் ஆகும்.

தொடர்ச்சி 18 பக்கம்




# ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் (இந்து) ஆலய அறக்கட்டளை

## SHRI KANAGATHURKKI AMMAN (HINDU) TEMPLE TRUST

5, Chapel Road, West Ealing, London, W13 9AE, UK. (+44) 208 810 0835, (+44) 208 840 0485



ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் - திருப்பழுகாமம், மட்டக்களப்பு




ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் - மன்னார்




ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் - செட்டிப்பாளையம், மட்டக்களப்பு




ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் மணி மண்டபம் வவுனியா




ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் முதியோர் இல்லம் மன்னார்



ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் பதுளை

**இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்**
**கணினி பயிற்சி நிலையம் - யாழ்ப்பாணம்**
**LONDON SRI KANAGA THURKKAI AMMAN**
**COMPUTER TRAINING CENTRE - JAFFNA**
FUNDED BY: SRI KANAGATHURKAI AMMAN TEMPLE TRUST (UK)
ADMINISTERED BY: TAMIL INFORMATION TEHNOLOGY ASSOCIATION

**இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்**
**கணினி பயிற்சி நிலையம் - சாவகச்சேரி**
**LONDON SRI KANAGA THURKKAI AMMAN**
**COMPUTER TRAINING CENTRE - CHAVAKACHCHERI**
FUNDED BY: SRI KANAGATHURKAI AMMAN TEMPLE TRUST (UK)
ADMINISTERED BY: TAMIL INFORMATION TEHNOLOGY ASSOCIATION

**இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்**
**கணினி பயிற்சி நிலையம் - கல்முனை**
**LONDON SRI KANAGA THURKKAI AMMAN**
**COMPUTER TRAINING CENTRE - KALMUNAI**
FUNDED BY: SRI KANAGATHURKAI AMMAN TEMPLE TRUST (UK)
ADMINISTERED BY: TAMIL INFORMATION TEHNOLOGY ASSOCIATION

**இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்**
**கணினி பயிற்சி நிலையம் - திருகோணமலை**
**LONDON SRI KANAGA THURKKAI AMMAN**
**COMPUTER TRAINING CENTRE - TRINCOMALEE**
FUNDED BY: SRI KANAGATHURKAI AMMAN TEMPLE TRUST (UK)
ADMINISTERED BY: TAMIL INFORMATION TEHNOLOGY ASSOCIATION

**எங்கள் அம்மனின் அற்புதங்கள் ஆயிரம்.**
**அவளிடம் முறையிடுங்கள்.**
**அவளை ஆராதியுங்கள்.**
**அளப்பரும் கருணையில் திளைப்பீர்கள்.**
**அவள் பெயரால் அவள் பணிக்கு உதவுங்கள்.**

கோவிலின் செலவுகள் தவிர்ந்த காணிக்கையில் மூன்றில் ஒரு பகுதி ஈழத்தில் அவதியுறும் சிறுவர்களை பராமரிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றது.

**இது வரை எமது ஆலயத்தினால் தாயகத்திற்கு**

# £1,374,728.00

**பவுண்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

**கந்தமார் தரு பொழில் மந்திகள் பாய் தர மதுத்திவலை**
**சிந்து பூந்துறை கமழ் திருநெல்வேலி உறை செல்வர் தாமே** (3-350)

திருநெல்வேலியில் நீர்த்துறைகள் உள்ளன. இருமருங்கிலும் மலர்ச் செடிகொடிகள் மிகுந்த வளமான நறுமணம் கமழும் சோலைகள் இருக்கின்றன. மரங்களின் மேலே மந்திகள் தாவிக்கொண்டிருக்கின்றன. அதன் விளைவாக மலர்களிலிருந்து தேன் சிந்துகிறது.

**மந்திகள் நடனமாடுதல்**

**திருகல் வேய்கள் சிறிதே வளையச் சிறுமந்தி**
**முருகின் பணை மேலிருந்து நடம் செய் முதுகுன்றே** (2-200)

கோணலை உடைய மூங்கில்கள் சிறிதே வளைந்திருக்கச் சிறிய மந்திகள் அகில் மரங்களின் கிளைகளின் மேல் நின்று நடனம் புரியும் இடம் முதுகுன்றமாகும்.

**அந்தண் சாரல் வந்தார் மடமந்தி கூத்தாட.** (2-208)

அழகிய குளிர்ந்த மலைச்சாரலின் அருகே மந்திகள் நடனமாடும் இடம் திருநணா ஆகும்.

**மந்தி பல மாநடம் ஆடுந் துறையூர்** (7-013)

பல குரங்குகள் கூடி நடனம் செய்யும் இடம் திருத்துறையூர்

**மந்திகள் வழிபடுதல்**

இறைவன் திருத்தலங்களில் வாழும் குரங்குகளுக்கும் இறைவுணர்வு இருக்கிறது. அவைகளும் வழிபடுகின்றன.

**மந்தி வந்து கடுவன்னொடுங் கூடி வணங்கும் வலிதாயம்** (1-003)

பெண் குரங்கு ஆண் குரங்கோடு கூடி வணங்கும் சிறப்பை உடைய இடம் திருவலிதாயம்

**மந்தியேறி இன மாமலர்கள் பலகொண்டு**
**முந்தித் தொழுது வணங்குங் கோயில் முதுகுன்றமே** (2-200)

குரங்குகள் கூட்டமாய் மரங்களில் ஏறிப் பல மலர்களைக் கொண்டு முற்பட்டுத் தொழுது வணங்கும் கோயிலை உடையது முதுகுன்றாகும்

**மந்தி கடுவனுக்கு உண்பழம் நாடி மலைப்புறம்**
**முந்தி அடிதொழ நின்ற சீர் முது குன்றரே** (7-043)

பெண் குரங்குகள் ஆண் குரங்குகளுக்கு கொடுக்க வேண்டிப் பழங்களைத் தேடுகின்றன. அவை இறைவன் அடி பணிகின்ற இடம் திருமுதுகுன்றம் ஆகும்

**மந்தி கடுவனுக்கு உண்பழம் நாடி மலைப்புறம்**
**சந்திகள் தொறும் சலபுட்பம் இட்டு வழிபடப்**
**புந்தி உறைவாய் புக்கொளியூர் அவிநாசியே** (7-092)

பெண் குரங்குகள் ஆண் குரங்குகளுக்கு கொடுக்க வேண்டிப் பழங்களைத் தேடுகின்றன. அவை இறைவனை நீர், மலர்கள் தூவி வழிபடும் இடம் அவிநாசி ஆகும்.

## தமிழ்க் கலை நிலையத்ததின் கலை விழா 2010

சைவ முன்னேற்றச் சங்கத்தின் நால்வர் தமிழ்ப் பாடசாலை தமிழ்க் கலை நிலையம் தமது கலைவிழாவை சென்ற ஜுலை மாதம் 24ஆம் திகதி கொண்டாடியது. திருமதி உமா ஜெயகுமார் அவர்கள் பிரதம அதிதியாக விழாவைச் சிறப்பித்தார்கள். பேச்சு, பாட்டு, நடனம், வீணை, நாடகம் எனப் பல நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. பெருந்தொகையான மாணவர்கள் கலந்து விழாவுக்கு மெருகூட்டினர். - **நிகழ்வுப் படங்கள் 24ஆம் பக்கத்தில்**

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

## அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

### ஆகஸ்டு (01-08-2010) தொடக்கம் செப்டெம்பர் (30-09-2010) வரை

| | | | |
|---|---|---|---|
| 06-08-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | அதிபத்த நாயனார் |
| 13-08-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | கலிக்கம்ப நாயனார் |
| 15-08-2010 | ஞாயிறு | சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை | |
| 20-08-2020 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | கலியநாயனார்,ஸ்ரீவரலக்ஷ்மிபூசை |
| 23-08-2010 | திங்கள் | ஸ்ரீ நடராஜர் அபிஷேகம் காலை | 7மணி |
| 27-08-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | சக்தி நாயனார் |
| 03-09-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | ஐயடிகள் காடவர்கோன் |
| 10-09-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | கணம்புல்லர் நாயனார் |
| 11-09-2010 | வெள்ளி | ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி | |
| 17-09-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | காரி நாயனார் |
| 21-09-2010 | செவ்வாய் | ஸ்ரீ நடராஜர் அபிஷேகம் மாலை | 5.30 மணி |
| 24-09-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | நெடுமாறர் நாயனார் |
| 01-10-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | வாயிலார் நாயனார் |
| 08-10-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | முனையடுவார் நாயனார் |
| | | நவராத்திரி ஆரம்பம் | |
| 15-10-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | கழற்சிங்கர் நாயனார் |
| 17-10-2010 | ஞாயிறு | விஜயதசமி, கேதாரகௌரி விரதம் | |
| 22-10-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | இடங்கழி நாயனார் |
| 29-10-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | செருத்துணை நாயனார் |

**ஸ்ரீ சிவகாமசுந்தரி சுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் சந்நிதி தினமும் மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை சிவனடியார்களுக்காகத் திறந்திருக்கும்.**

**தினமும் மாலை 8மணிக்கு பூசை வழிபாடு நடைபெறும். மேலே குறிப்பிட்ட விசேட தினங்களில் அபிடேக ஆராதனை, கூட்டு வழிபாடு போன்றவை நடைபெறும். அன்பர்கள் அனைவரும் சந்நிதிக்கு வந்து வழிபாடுகளிலே கலந்து எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ நடராசப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு சைவ முன்னேற்றச் சங்கம் அடியார்களை அன்புடன் வரவேற்கிறது.**

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**


Accident
courtesy
வாகன விபத்தா?
மாற்று வாகனம் தேவையா?
நஷ்டஈடு பெற்றுத்தரவேண்டுமா?
உங்களது விபத்து எவ்வாறு நடந்தது என்பதை காப்புறுதி கூட்டுதாபனத்திற்கு அறிவிக்க வேண்டுமா?
உங்களுக்கு பிடித்த வாகன உற்பத்தியாளர்களிடமே வாகனத்தை திருத்த வேண்டுமா,
உங்களுக்கு ஏற்பட்ட வீண் செலவீனங்களை மீளப்பெற்றுத்தரவேண்டுமா,
விபத்து நடந்த இடத்திலிருந்து வாகனத்தை அப்புறப்படுத்த வேண்டுமா,
அனைத்தையும் இலவசமாக எவ்வித முகவவர் கட்டணம் இல்லாமல் பெற்றுக்கொடுக்கும் ஒரே நிறுவனம்
Call us now
0845 8710 196 / 07903 810 196
Web: www.accidentcourtesy.com
No excess to pay
100% Injury Compensation


Accident
courtesy
வாகன விபத்தா?
BRANCH
142 Pinner Road,Harrow,
Middlesex,HA1 4JE
BRANCH
Trocoll House Wakering Road,
Barking,Essex,IG11 0TJ
BRANCH
13 Progress Business Park
Progress Way, Croydon
Surrey CR0 4XD
HEAD OFFICE
Beechfield House,
Lyme Green Business Park,
Winterton way, Macclesfield,
Cheshire,SK11 0LP
எம்மை நேரடியாக
தொடர்பு கொள்பவர்களுக்கு
எவ்வித கொமிஷனும்
அறவிடப்படமாட்டாது
அதாவது 100 %
நஷ்டஈடு பெறுவீர்கள்
தொடர்பு கொள்ளுங்கள்!
0845 8710 196
07903 810 196
Web: www.accidentcourtesy.com
www.accidentcourtesy.co.uk
"accident courtesy Ltd regulated by
ministry of justice our Authorisation
Number: CRM2523"
We don't charge any commision for whoever calls directly
This means they get 100 % compensation

மேற்கு இலண்டனில் 1991ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது ஆலயம், இலண்டனில் மட்டுமன்றி தமிழர்கள் வாழும் இடங்களிலெல்லாம் பாரிய பணி ஆற்றி வருகின்றது. குறிப்பாக, எங்கள் ஈழத் தாயகத்தின் வடக்கு - கிழக்கு மக்களுக்கு சபையும் இணைந்து அபரிமிதமான பணிகளை மேற்கொள்ளுகின்றனர்.

**தாயகம் நோக்கிய சேவைகள்:**

தாயகத்தின் வடக்கு, கிழக்கை இலங்கை அரசு

# ஸ்ரீ கனகதுர்க்கையின் கடைக்கண் பார்வை

அரும்பெரும் சேவைகளை ஆற்றி வருகின்றது. ஏறத் தாழ மூன்றரை வருடங்கள்வரை நிரந்தர இடமின்றி, நடமாடும் ஆலயமாக இருந்த ஸ்ரீ கனகதுர்க்கை, 1995இல் தனக்கென ஈலிங் பதியில் அமைத்த ஆலயத்தில் நிரந்தரமாக அமைந்தாள். 'ஹரோ' பகுதியில் முகிழ்த்து, 'வெம்பிளி', 'சவுத்தோல்' ஆகிய பகுதிகளில் அரும்பி, கொடிவிட்டு மலர்ந்த எம் ஆலயத்துக்கு அடியார்கள் பணப் பசளையை வாரி இறைத்தனர். ஆலயம் என்பது ஆன்மாக்கள் கூடி இலயிக்கும் இடம் அல்லவா? மிகக் குறுகிய காலத்தில் அடியார்கள் நாற்புறமும் தேடிக் குவித்த தேட்டத்துக்கு, சக்தி துணை நின்றாள். மக்கள் சக்திக்கு அருட்சக்தி அருள் சுரக்க, அடியார்கள் மகரந்தம் சேர்க்கும் தேனீக்களாக, பணத்தை வாரிக் குவித்தனர். 1995இல் ஆலயத்துக்கான நிரந்தரக் கட்டிடம் வாங்கி, அதிலே அம்பாள் நிரந்தரமாகக் குடிகொண்டாள். நடமாடும் ஆலயமாக இருந்தவேளை, ஒரு 'பூசகரும்', ஒரு வண்டியும், ஓர் அம்மன் படமும் இருந்தால் ஆலயம் அமைத்துவிடலாம்! என்று எள்ளி நகையாடிய ஒரு சிலர் எங்கோ ஓடி மறைந்துவிட, அம்பாள் விசுவரூபம் கொண்டாள். ஆலயம் என்பது மக்களால், மக்களுக்காக நடத்தப்படவேண்டும் என்ற தாரக மந்திரத்தை உள்வாங்கிய, ஒன்பதுபேரை உள்ளடக்கிய ஆலய அறங்காவலர்கள், பொதுமக்களைக்கொண்ட ஒரு நிர்வாக சபையை அமைத்து நிர்வாகத்தைப் பொதுமக்களிடமே கையளித்தனர். இன்று ஆலய நிர்வாக சபையும், அறங்காவலர் பிரித்தாலும், ஸ்ரீ கனகதுர்க்கை தன்னுடைய அடியார்களின் சேவையூடாக தொப்பூழ் கொடி உறவுகளை இணைத்தும், பிணைத்தும் அருள் பாலிக்கிறாள். இதுவரை, ஆலயம், பதின்மூன்று இலட்சத்து எழுபத்து நாலாயிரத்து எழுநூற்று இருபத்தெட்டு ஸ்ரேர்லிங் பவுனை (£1,374,728) எமது தாயகத்துக்கு அனுப்பி வைத்துள்ளது. 'காக்கும் கரங்கள்', 'அணைக்கும் கரங்கள்', 'அறிவுச் சுடர்' ஆகிய செயற்திட்டங்கள் மூலமாக, வாழ்வாதாரமற்ற அநாதைப் பிள்ளைகளுக்கு ஆலயம் உதவிக் கரம் நீட்டியிருக்கிறது. சுடச் சுடரும் பொன்போல், அடியார்கள் வழிபட, வழிபட பெருக்கெடுக்கும் கனகம் முழுவதும் எம் மக்களின் வாழ்வுக்கே வித்தாகின்றது. வடக்கிலும் கிழக்கிலும் ஸ்ரீ கனகதுர்க்காவின் பெயரால் இல்லங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அண்மையில், தடுப்பு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வறிய மாணவர்களுக்கு £ 29,815 பவுன் (ஸ்ரேர்லிங் பவுன் இருபத்தொன்பது ஆயிரத்து எண்ணூற்றுப் பதினைந்து) பணம் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது. ஊர்காவற் துறையில் ஐம்பது ஆதரவற்ற பிள்ளைகளைப் பொறுப்பேற்று ஸ்ரீகனகதுர்க்காவின் பெயரால் அவர்களைப் பராமரித்து வருகிறோம். இந்தப் பிள்ளைகள் அனைவரும் பெற்றோரை, உற்றாரை இழந்து அண்மையில் தடுப்பு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் ஆகும். அநாதைப் பிள்ளைகள் பலரை அடியார்கள் பலர் மாதா மாதம் பதினைந்து பவுன் (£15)

செலுத்தி பராமரிப்பு செய்துவரும் திட்டத்தின் மூலமாக ஸ்ரீ கனகதுர்க்கா பாதுகாத்து வருகிறாள்.

மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள ஆதரவற்ற பிள்ளைகளை இதுவரை எமது அடியார்கள் பொறுப்பு எடுத்திருப்பது அம்பாளின் அருளேயாகும். இதுவரை 500 ஆதரவற்ற பிள்ளைக்ளை அடியார்கள் பொறுப்பு எடுத்துள்ளனர். என்பதைப் பெருமையாக இங்கே பதிவு செய்கிறோம்.

நெதர்லாந்து பிள்ளையார் ஆலயம் அமைக்க பத்தாயிரம் பவுன் (£10,000) பணத்தையும் ஸ்கொட்லாந்து பிள்ளையார் ஆலயத்துக்கு ஐயாயிரம் பவுன் (£5,000) பணத்தையும் ஸ்ரீ கனகதுர்க்கா வழங்கியிருக்கிறாள். 'வணங்கா மண்' நிதிக்கு நாற்பதாயிரம் பவுனை (£40,000) ஆலயம் அளித்தது.

ஆலயம் சுரக்கும் காணிக்கை தொடர்ந்து அறப் பணிகளுக்கு அர்ப்பணிக்க இருக்கிறோம்.

"மக்கள் சேவையே
மகேசன் சேவை!"

**- ச. சிறீரங்கன் -**
**செயலாளர்**
**அறங்காவல் சபை**

# ஆடி அமாவாசை விரதம்

ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் கோயில் பிரம்மோற்சவங்கள் ஏதாவது திதி அல்லது நட்சத்திர நாளில் தீர்த்தத் திருவிழா வரும்படியாக அமைத்தே செய்வார்கள். உதாரணமாக, சிதம்பரம் கோயில் மார்கழி திருவாதிரையையும் ஆனித் திருமஞ்சனத்தையும் வைத்தே அதற்கு முன்னர் தேர்த்திருவிழா அமையும்படி நடத்துகின்றனர். ஈழத்தின் வடக்கில் சிவராத்திரியைத் தீர்த்த நாளாக வைத்து கீரிமலை சிவன்கோயிலிலும் ஆடி அமாவாசையை தீர்த்த நாளாக வைத்து மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலிலும் உற்சவங்கள் நடைபெறுகின்றன.

இலண்டனிலும் Tooting முத்துமாரி அம்மன் கோயில் சித்திரை மாதப் பூரணையை தீர்த்த நாளாக வைத்து உற்சவம் நடத்துகிறார்கள். ஏனைய கோயில்களில் ஞாயிற்றுக்கிழமைகளில் தேர் வரக்கூடியதாகவே உற்சவங்கள் நடக்கின்றன.

இம்மாதம் (ஆகஸ்டு) எட்டாம் திகதி, ஞாயிற்றுக்கிழமை, ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் கோயிலிலும் ஈஸ்ட்ஹாம் லண்டன் ஸ்ரீ முருகன் கோயிலிலும் தேர் உற்சவம் நடைபெறுகிறது. ஆனால் எதிர்பாராத விதமாக இம்முறை ஒன்பதாம் திகதி ஆடி அமாவாசை அமைகின்றது. எனவே இம்முறை இரண்டு கோயில்களிலும் இறையருளால் ஆடி அமாவாசையோடு உற்சவம் நடைபெறுவது சிறப்பாகிறது. இந்தச் சந்தர்ப்பத்தை அடியார்கள் பயன்படுத்தி இறையருள் பெறலாம்.

தந்தையை இழந்தவர்கள் ஆடி அமாவாசை தினத்தில் விரதம் பிடிப்பதும் தர்ப்பணம் பண்ணுவதும் மரபு.

**தகவல்: திரு சிவானந்தசோதி**


# நால்வர் தமிழ்க் கலைநிலையம் - கலைவிழா 2010



பிரதம அதிதி
திருமதி உமா
ஜெயகுமார் அவர்கள்



திரு திருமதி
வாமனானந்தன்
தம்பதியை
கௌரவித்தல்




## மாணவர்கள் கலை நிகழ்ச்சிகள்










# ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் சந்நிதி ஆனித்திருமஞ்சன அலங்கார உற்சவம் - 2010










## சிறுவர் கலை நிகழ்ச்சி





# "வில்"லாதி வில்லன்

ஒரு மனிதனுக்குப் பெரிய கவலை. 'இந்த உலகத்தில் எதுவுமே நாம நினைக்கிறமாதிரி நடக்க மாட்டேங்குது!' என்பது. இதன் காரணமாகவே அவனுக்கு மன அமைதி இல்லை. 'இந்த உலக வாழ்க்கை நமக்குத் தேவையில்லை!' என்றுகூட நினைக்க ஆரம்பித்துவிட்டான். இந்த நிலையில் ஒரு நாள் அவனுக்கு வில்வித்தை கற்றுக்கொள்ளவேண்டும் என்று ஆசை வந்தது. ஒரு குருவைத் தேடிச் சென்றான். அவரும் தனக்குத் தெரிந்த வித்தைகளை-யெல்லாம் இவனுக்குக் கற்றுக்கொடுத்தார். 'இனிமேல் இதையெல்லாம் தொடர்ந்து பயிற்சி செய்' என்று சொல்லி அனுப்பிவைத்தார்.

இவன் வந்தான். ஒரு மரத்தில் வட்டமாகக் கோடுபோட்டு, அதன் மையத்தில் ஒரு புள்ளியை வைத்தான். தூரத்தில் நின்றுகொண்டு அம்பை விட்டான். அது சற்று விலகிப்போயிற்று. மறுபடி முயன்றான். ஆனால் மையத்தைத் தொட முடியவில்லை. இப்படிப் பலமுறை முயன்றும் சரியாக அந்தப் புள்ளியின்மீது அம்பு பாயவில்லை.

அவன் மனம் உடைந்துபோனான். 'நம்ம ஜாதகமே இப்படித்தான். எதுவுமே நாம நினைக்கிறபடி நடக்கிறதில்லை!' என்று சோர்ந்துபோய் ஒரு மண்டபத்தில் உட்கார்ந்தான். அப்போது ஒரு பெரியவர் அந்தப் பக்கமாக வந்தார். "என்ன தம்பி கவலை?" என்றார்.

"மனதில் அமைதி இல்லை".

"என்ன காரணம்?"

"நான் வைக்கிற குறி எல்லாம் தப்பிப் போகுது."

"சரி, என்னோடு வா!" என்று அவனை அடுத்த ஊருக்கு அழைத்துச் சென்றார்.

அங்கே பல மரங்களில் வட்டங்கள் வரையப்பட்டிருந்தன. அவற்றின் மையத்தில் கரும்புள்ளி. அந்தப் புள்ளிகளில் மிகச்சரியாக அம்புகள் குத்திக்கொண்டு நின்றன.

இவனுக்கு மிகுந்த வியப்பு. "எப்படி இது? யார் இந்த மனிதன்? மிகவும் கெட்டிக்காரனாக இருப்பான் போல இருக்கிறதே... ஒரு மரத்திற்கூட அவன் குறி தப்பவில்லை. அவனைப் பார்க்க வேண்டுமே!" என்றான் பெரியவரிடம்.

"அதற்குத்தானே உன்னை இங்கே அழைத்து வந்திருக்கிறேன்.. " என்றார் பெரியவர், "ஆனால் ஒரு விஷயம்!" என்று நிறுத்தினார்.

"என்ன அது?..."

"அவன் ஒரு கிறுக்கன். தான் நினைக்கிறபடியே இந்த உலகில் எல்லாம் நடக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறான்!"

"அப்படியானால் வாழ்வின் இரகசியம் என்ன என்பதை அவனிடந்தான் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும்.... வாருங்கள் போகலாம்!"

நண்பர்களே! அந்த ஆளை நாமும் சந்திக்கலாம். அதற்கு முன் ஒரு வார்த்தை. நமக்கும் அவனுக்கும் என்ன வித்தியாசம் தெரியுமா? **நம்மை அநுசரித்து இந்த உலகம் நடக்கவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். இந்த உலகத்தை அநுசரித்து நாம் நடந்தால் என்ன என்று அவன் நினைக்கிறான்.** அவ்வளவுதான்!

சரி, வாருங்கள். அந்தப் பித்தனைச் சந்திப்போம்.

அதோ.. நம்ம ஆளும் பெரியவரும் அந்தப் பித்தனிடம் ஏதோ கேட்கிறார்கள். கவனியுங்கள்!

"வில்வித்தையில் நீ ரொம்பவும் கெட்டிக் காரனா?"

"அதெல்லாம் கிடையாது. எனக்கும் வில்வித்தைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை!"

"அப்புறம் எப்படி...... குறி தவறாமல்?"

அவன் சிரித்துக்கொண்டே சொன்னான்:

"அது ஒண்ணும் பெரிய காரியம் இல்லே. முதல்லே மரத்தின் மீது அம்பு விடுவேன். அதுக்கப்புறம் கிட்டே போய் அதைச் சுத்தி ஒரு வட்டம் வரைஞ்சுடறேன், அவ்வளவுதான்!"

**- தென்கச்சி சுவாமிநாதன்**

**நன்றி - 'சக்தி' விகடன்**

## படித்தவர் பகிர்வுரை

சஞ்சை சுப்பிரமணியன் அவர்களின் சங்கீதக் கச்சேரி விமரிசனம் படித்தேன். மிக கவனமாக, பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து எழுதியுள்ளீர்கள். சக்சேரியை நேரிலே கேட்ட ஒருவர் என்றதனால் நான் விமரிசனத்தை மேலும் அநுபவிக்க முடிந்தது.

**திருமதி. ம. ரவி**
**எப்சம்**

கண்ணனும் தாத்தாவும் நல்ல தொடர். அதிலே சமூகவிடயங்களையும், சமய விடயங்களையும் முத்து என்பவர் மிக அழகாக எழுதி வருகின்றார். சிறு பிள்ளைகளுக்கு ஏற்றதாக உள்ளது. இங்கு உள்ள சில சிறுவர்களுக்குத் தமிழ் வாசிப்பது கடினமாக இருக்கலாம். தாய், தகப்பன் அவர்களுக்கு வாசித்துக் காட்டலாம். ஒரு தாத்தாவும் பேரனும் மேற்கு நாடொன்றில் எப்படி இருப்பார்கள் என்பது நல்ல கற்பனை. தொடர்ந்து இந்தப்பகுதியைப் பிரசுரியுங்கள்.

**பெயர் குறிப்பிடாத வாசகர்.**

'பெற்றதை இழக்கலாமா?' என்ற தலைப்பில் சென்ற இதழிலே வந்த தலையங்கம் நன்றாக இருந்தது. திருமுறைகளின் அருமை, பெருமைகளை மிக அழகாக எடுத்துக்காட்டியுள்ளீர்கள். ஆனால் உங்கள் எழுத்து நடையிலுள்ள உட்கருத்து எத்தனை பேருக்கு விளங்கியிருக்குமோ தெரியாது. கொஞ்சம் விவரமாகவே நீங்கள் இப்படியான விடயங்களை எழுதலாம். நல்லதை எழுத ஒருநாளும் தயங்கக் கூடாது. கோயில்களிலே பஜனை என்ற பெயரில் பல பாடல்களை பலரும் போட்டி போட்டுக்கொண்டு பாடுகிறார்கள். நான் யாழ்ப்பாணத்திலே பிறந்து வளர்ந்தவன். அங்கே உள்ள கிராமங்கள் பலவற்றிலும் உள்ள கோயில்களில் புராண படனமும் தேவார, திருவாசகங்கள் பாடுவதும் அன்றாடக் காட்சிகள். இப்போ அவை எல்லாம் மாறிக்கொண்டு வருகின்றன. இது வேதனை தருகிறது.

**திரு சிவராஜா**
**குறொய்டன்**


**If you would like your Kalasam to be sent to your home address, please fill in the form below and send it to us with your payment.**

# கலசம்
# KALASAM

இலவச காலாண்டிதழ்

## கலசம் உங்கள் வீடுதேடி வரவேண்டுமா?

இப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்!

பெயர் :..............................................

முகவரி :..............................................

..............................................

..............................................

..............................................

Donation: £..................

Postage: £..................

Total £.

Kalasam
*2 Salisbury Road*
Manor Park
London E12 6AB

kalasam@hotmail.com

Postage and admin : £10 (U.K/Europe) : £ 20 (Rest of the world) (இரு வருடங்களுக்கு)

# Sindu Mahal Restaurant

"A Taste With A Difference"

உங்கள் நாவிற்கு நற்சுவை தரும்
தரமான உடனுக்குடன் தயாரித்த
தாயக உணவு வகைகளையும்
குடும்பத்துடன் வந்து சுவைத்து மகிழ
நீங்கள் நாட வேண்டிய இடம்




## சிந்து மஹால் உணவகம்

இதோ எமது சிறப்பு உணவுவகைகள்

Sindu Special Briyani
Ceylon Style Briyani
Sindu Special Kothu Roti
Mix Masala Dosai
Sindu Special Puttu Kothu

100 இடியப்பம்
8 பவுண்கள்
மட்டுமே.

அத்துடன் உங்கள் திருமணம், பிறந்தநாள் மற்றும் பூப்புனித நீராட்டுவிழா, அரங்கேற்றம் போன்ற மங்களகரமான நிகழ்வுகளிற்கான உணவு வகைகளும், பலகார வகைகளும் செய்து கொடுப்பதுடன், உணவு அளவிற்கேற்ப இலவச விநியோகமும் செய்யப்படும்.



274 Barking Road
East Ham, London E6 3BA
020 8471 6226 / 07984 423 284

Finest Sri Lankan & South Indian Cuisine

AravindanS

SOLICITORS AND COMMISSIONERS FOR OATHS

Specialise in Shop Leases



Specialise In:

- Residential & Commercial
- Off / On Licences
- Administration of Oaths
- Power of Attorney
- Sponsorship Declaration
- Right to Buy
- Wills & Probate
- Private Immigration

T: 020 8503 5034 F: 020 8471 7307 DX: 4721 EAST HAM

First Floor, 216A High Street North, East Ham, London E6 2JA

**ஒருவர் பிறந்தால் அல்லது இறந்தால் தீட்டு அல்லது ஆசௌசம் என்று சொல்லப்படும் விடயம் என்ன? அது இந்த நூற்றாண்டிலே தேவையா? எல்லாம் சுகாதார காரணங்களுக்காக வந்தவை. இப்போ வசதிகள் உள்ளதால் தேவையில்லை என்று பல வாதங்கள் வருகின்றன. இக் கட்டுரையைப் படிப்பவர்கள் தம்முடைய கேள்விகளுக்கு இங்கே விடை தேடி, தாமே முடிவு செய்யலாம்.**

தூய்மைக்கும், கிரியா பரமான தூய்மைக்கும் வேறுபாடு உண்டு என்பதை அவர்கள் உணர்வதில்லை. இருவேறு திசையில் போகும் நாகரிகங்களின் மோதுதலில் சிக்கித் தவிப்பவர்களின் சந்தேகங்களைப் போக்கி 'துவந்துவங்கள் தூய்மை செய்வதே' இத் தொகுப்பின்நோக்கம்.

சைவசமயிகளிடையே கோயிலுக்குப் போதல், விவாகம் போன்ற நற்கருமங்களின் போது

# ஆசௌச விளக்கம்

***"சம்ஸ்கார பராமரிசம் உண்மை யானும் அதன் இன்மை கூறப்பட லானும்"***
***- பிரம்மசூத்திரம் 101***

***"புறத்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை வாய்மையால் காணப் படும்."***
***- குறள் 298***

முனிமொழி என ஔவையார் பாராட்டிய பிரம்மசூத்திரம், சம்ஸ்காரங்கள் மூலமே ஒருவன் ஞானம் பெறத்தக்க பக்குவம் பெறுவான் என்பதை வலியுறுத்துகிறது. தரும சாஸ்திரங்களிலே நாற்பது சம்ஸ்காரங்கள் பேசப்படுகின்றன. சைவ ஆகமங்கள் அவற்றுள் பதினாறை வலியுறுத்தும் (சம்ஸ் + காரம் = தூய்மைப்படுத்தும் கிரியை)

அவை ஏன்? ஆன்மிக வாழ்வுக்கு உயிர்நாடியான அவை இன்றைய லௌகிகப் போக்குக்கு வேண்டிவை தானா? இவ்வித ஐயவினாக்கள் சைவ மக்களிடையே எழுகின்றன. முக்கியமாக மரணவீட்டுக்குச் சென்று வருவோர் தூய்மை செய்யப்படுவது அவசியம் என்று பழமை பேணுவோர் கருதுகிறார்கள். இது விஞ்ஞான அடிப்படையில் தோன்றியது என்று விளக்கம் அளித்துத் திருப்தியடைகிறார்கள். சுகாதார பரமான

எனக்கு ஆசௌசம் என்ற பேச்சு இடம் பெறும். அதை எதிர்த்தும், விஞ்ஞான விளக்கம் கொடுத்து ஆதரித்தும் பேசுவோர் அதிகம். ஆசௌசம் என்ற சொல் திரிந்து பேச்சுவழக்கில் ஆசூசம் என்று ஆயிற்று.

'சுகி' என்றால் சுத்தம். சௌசம் சுத்தம் உடையது. அசுசி - அழுக்கு, ஆசௌசம் (கிரியாபரமான) சுத்தம் இன்மை. ஆன்ம ஈடேற்றத்தின்பொருட்டுக் கிரியைகளைச் செய்கிறவனுக்கு அவைகளைச் செய்ய அதிகாரம் இல்லாமற் செய்யும் ஓர் அசுத்தி ஆசௌசம் எனப்படும். தீட்டு, தொடக்கு என்ற சொற்களும் மக்கள் பேச்சில் வரும். துடக்கு நீக்கிய பின்னரே நற்காரியங்கள் செய்யலாம். இல்லாவிட்டால் உளரீதியான ஓர் அருவருப்பு உள்ளே இருந்து கொண்டே இருக்கும். மனம் ஆன்மிக நற்கருமத்தில் படியாது.
அசுத்தியை(அழுக்கை)ப்போக்க 1) காலம் 2) ஸ்நானம் (நீராடல்) 3) இரண்டும் ஆக மூன்று வழிகள் இருக்கின்றன.

1) ஊரில் ஒரு இறப்பு நிகழ்கிறது. அழுகை, மேளஒலி, ஒலிபெருக்கி மூலம் மரணம் பற்றி ஊரார் அறிகின்றனர். கோயிற் பூசை நிறுத்தப்படும். நற்காரியங்கள் நடைபெறா. ஊர்த்துடக்கு பிரேதம் ஊருக்குள் இருக்கும்

காலம் வரை அவ்வூர் மக்களைப் பீடிக்கும். பிரேதம் ஊரிலிருந்து அகற்றப்பட்டதும் துடக்கு நீங்கிவிடும்.

2) இறப்பு நிகழ்ந்த வீட்டுக்குச் சென்று மரணச்சடக்குகளில் பங்குபற்றிய அயலவர், உறவினர் ஆசௌசம் ஸ்நானத்தால் நீங்கும். இரத்த உரித்துக்காரர் (ஆண்வழி) ஆகிய துடக்குக் காப்போருக்கு உறவு பற்றி, மனத்தில் துக்கம் நிலைத்திருக்கும். இறந்தோரை நினைத்து இடையில் அழுகை வரலாம். துன்பம் தோய்ந்த உள்ளத்துடன் ஆன்மிக முயற்சிகளில் ஈடுபடமுடியாது. அதனால் ஒரு குறித்த கால எல்லை வைத்து அதன் முடிவில் நீராடி ஆசௌசத்தை நீக்கலாம். இங்கு காலம் ஸ்நானம் ஆகிய இரண்டும் வேண்டியதாகிறது. ஆசௌசம் பத்துவகையாக ஏற்படலாம் 1) பிறப்பு, 2) இறப்பு, 3) சுடுதல், 4) பி-ரேதத்துக்குப் பின்னே செல்லல், 5) காவுதல், 6) அழுதல், 7) ஆசௌசிகளிடம் சாப்பிடுதல் 8) கலத்தல், 9) குறித்த எல்லையில் தலைமயிரை அகற்றாமை, 10) இறந்தவருடைய உரிமைக்காரர் (மகன் அல்லது கொள்ளி வைத்தவர்). இறந்தவரது பிரேதத்தன்மையை நீக்கிவிடும் கிரியை ஆகிய சபீண்டீகரணம் செய்யாமை, (மயிர்முழுவதையும் களைதல் ஆசௌச நீக்கத்தின் பொருட்டு இன்றும் பல கிராமங்களில் வழக்கம்)

## பிறப்பு

ஒரு வீட்டில் குழந்தை பிறத்தல் தொடர்பாக உண்டாகும் துடக்கு நான்கு வகையானது.

1. கருச்சிதைவு நான்கு மாதத்துக்குள் நிகழ்தல்
2. 5ஆம் 6ஆம் மாதங்களில் நிகழ்தல்
3. 7ஆம் 8ஆம் 9ஆம் மாதங்களில் நிகழ்தல்
4 பத்தாம் மாதத்தொடக்கத்தில் நிகழும் இயற்கையான பிறப்பு.

முதலிரு நிகழ்ச்சிகளிலும் எத்தனை மாதச்சிசு வெளிப்பட்டதோ அத்தனை நாள்கள் துடக்கு. உதாரணம் 6ஆம் மாதத்தில் கருச்சிதைந்தால் 6 நாள் துடக்கு. அதன் பிறகு நிகழ்ந்தால் இயற்கையாகக் குழந்தை பிறக்கும் போது துடக்குக்காக்கும் நாள் அளவு. பிள்ளைப் பேற்றில் பெண் பிறந்தால் 40 நாளும் ஆண் பிறந்தால் 30 நாளும் பிதா,மாதா இருவருக்கும் துடக்கு. முதல் ஆறு மாதத்துள் சிசு அழிதலில் தந்தை முழுகத் துடக்குப்போம். துடக்குக் காக்கும் உறவினர் (ஞாதிகள்) 5ஆம் மாத நிகழ்விலிருந்து முழுகி ஆசௌசத்தைப் போக்கலாம். பூரணகருச்சிதைவிலும், பிள்ளை பிறந்தவுடன் இறந்தாலும், தந்தை 10 நாள் துடக்குக் காக்க வேண்டும். 10 நாள்களுள் குழந்தை இறந்தால் மரணத்துடக்குக் கொள்ளத் தேவையில்லை. இயற்கையான பிறப்பில் 30 நாள் துடக்குக் காப்பது வழக்கம். (தாய்க்கு 40 நாள் என்ற முறையில் குழந்தையைக் கோயிலுக்கு 40ஆம் நாள் கொண்டு போகும் வழக்கம் இருந்து வருகிறது.)

சைவக்குரு (ஆசாரிய அபிஷேகம் பெற்றவர்) ஆசௌச நிகழ்வில் உடன் சுத்தியாகிறார். தீட்சைபெற்ற சைவசமயத்தவருள் நியமங்களில் வழுவாது சந்தியாவந்தனம் செய்வோர் 25 நாளும், ஒழுங்காகக் கோயில் தொண்டு செய்வோர் 20 நாளும் துடக்கு காக்கவேண்டும். பிரமசாரிக்குத் துடக்கு இல்லை என்பது குருகுலத்தில் வசித்து ஞான நூல்களைக் கற்றலில் காலம் கழிப்பவர்க்கே பொருந்தும். உறவினருடன் வசிக்கும் பிரமசாரி அர்ச்சகர் இவ்விதியில் அடைக்கலம் புகமுடியாது. மூன்றாம் தீட்சையாகிய நிர்வாணதீட்சை பெற்றுச் சிவபூசை தவறாது செய்கிறவருக்கு மூன்று நாள் துடக்கும், கோயில்களில் ஓதுவார்களாகப் பணிபுரிவோர் 15நாளும், ஆடல் பாடல், வாத்திய வழிபாடுசெய்வோர் 14 நாளும் காக்கவேண்டும்.

விளக்கம் தொடரும்....

**நன்றி: ஆசௌச விளக்கம்,**
**திரு ஆ சபாத்தினம்**

**ஆத்திரம் உள்ளத்தில் எழும்போது, அறிவு தன்னைத் திரையிட்டுக் கொள்ளும். ஆத்திரம் கொண்டவன் தன் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்வதைத் தடுப்பது அவ்வளவு எளிதான செயல் அல்ல**


Sri
Valli's
ஸ்ரீ வள்ளிஷ்
Fresh Flowers
Fashion Jewellery
இறைவனுக்கு சாத்தும்
மாலை தொடக்கம்
அனைத்து மாலை வகைகளும்
உடனுக்குடன் செய்து தரப்படும்
தினம் மலர்ந்த மதுரை மல்லிகை
இங்கு கிடைக்கும்.
East Ham: 78, Church Road, Manor Park, London, E12 6AF Tel: 020 8514 7777
East Ham: 345, High St. North, Manor Park, London E12 6PQ Tel: 020 8471 5011
Wembley: Unit 3, 29-33, Ealing Road, Wembley, Middx HA1 4YA. Tel: 020 8903 0888
Croydon: Unit 1, 219, London Road, Croydon, Surrey CR9 2RL Tel: 020 8665 7245
Web: vallisuk.com
Email: info@vallisuk.com

# மதுரா

## (முத்தித் தலங்கள்) பயணக்கட்டுரை

சாவகச்சேரியூர் டாக்டர் கதிர்காமநாதன்

மதுராவை டெல்லியிலிருந்து கார் மூலம் சென்று அடைந்தோம் காலையில் 6 மணிபோல் தொடங்கிய பிரயாணம் பகல் 10.30மணிபோல் முடிவடைந்தது. கார் சாரதிக்கோ ஆங்கிலம் தமிழ் தெரியாது எனினும் எம்முடன் வந்து இடங்களை காட்டினார்.

மதுரா கிருஷ்ண பரமாத்மா பிறந்த இடமாகும். இதனால் இதை கிருஷ்ண ஜனன பூமி என்று அழைக்கின்றனர். ஆவணி மாதம் கிருஷ்ணபட்சத்து அட்டமி திதியில் ரோகினி நட்சத்திரத்தில் கண்ணன் பிறந்தான். மதுராவில் தான் கிருஷ்ணன் தனது தாய் மாமன் கம்சனைச் சண்டையிட்டு சம்ஹாரம் செய்தது.

மது + ரா = மதுரா . மது - என்றால் இனிமையான தேன். ரா = போன்ற. மதுராவை வட மதுரை எனவும் அழைப்பர்.

யமுனை நதியின் மேற்கு கரையிலிருக்கும் மதுரா கோயில் உத்தரபிரதேசத்தில் உளது. நாங்கள் காரை நகருக்கு சிறு தொலைவில் நிறுத்தி நடந்தே சென்றோம். கோயிலின் முகப்பில் வளைந்த சிகரம் போல் ஒரு அமைப்பு உள்ளது. இதில் துவாரபாலகர் போன்று, சிறு கோபுரம் போல் இருமருங்கும் கண்டோம். அதன் பக்கத்தில் ஒருவர் ஈட்டியை நாட்டியபடி வலது பக்கத்திலும் மற்றவர் ஈட்டியை வலது கையில் தூக்கியபடியும் காவல் புரிவதைக் கண்டோம். உள்வாசல் முன்தான் இவற்றைக் கண்டோம். மேலே தேரில் கண்ணனும் அருச்சுனனும் வெள்ளைக் குதிரைகளோடு வீற்றிருப்பதை பார்த்தோம். உள்ளே சென்றோம்.

சிறுகோயில் தான். சிறைக்கூடம் போன்ற அமைப்பில் பாலகிருஷ்ணனை காணலாம். பின்னணியில் கிருஷ்ணனின் நாமாவளி ஒலிக்கிறது. சிறிது நேரம் தான் தரிசிக்கலாம். பக்தர்கள் இரு கைகளாலும் மலர்களை எடுத்துத் தூவி புஷ்பாஞ்சலி செய்வதைக் காணலாம். நாமும் அவ்வாறே செய்தோம்.

வாசுதேவர் தேவகி தம்பதிக்கு கண்ணன் எட்டாவது குழந்தையாக சிறையில் பிறந்தான். தாயின் தமையனான கொடூர அரசன் கம்சன் பெற்றோர்களைச் சிறையில் அடைத்து வைத்தான். தங்கைக்குப் பிறக்கும் ஆண்குழந்தையால் தனக்கு மரணம் சம்பவிக்கும் என்ற காரணத்தால் ஏழு முதற் குழந்தைகளையும் பிறந்தவுடன் வெட்டிக் கொன்றான். தெய்வக்குழந்தையான கண்ணன் பிறக்கும்போது காவலாளர் துயில் கொண்டனர். நடுஇரவு குழந்தை பிரகாசித்தது. சிறைக்கதவுகள் திறந்தன. "கோகுலத்திற்கு எடுத்துச் செல்" என அசரீரி கூறியது. நந்தகோபர் கூடைமீது குழந்தையை வைத்து யமுனை நதி ஊடாகக் கோகுலம் கொண்டு சென்றார்.

**பிருந்தாவனம்:**

அடுத்ததாக பிருந்தாவனம் சென்றோம். அது மதுராவிலிருந்து 10கி.மீ தூரத்தில் உளது. நடந்தே சென்றோம். பிருந்தாவனமும் நந்தகுமாரனும் என்ற இனிமையான பாடல் யாருக்குத்தான் நினைவு வராது? பிருந்தா என்றால் துளசி, வனம் - காடு. பிருந்தாவனம் - துளசிக்காடு. விஷ்ணுவிற்கு பிடித்தமான மரம். இங்கே தான் கண்ணன் வளர்ந்து விளையாடி வெண்ணைய் திருடி பல லீலைகள் செய்து செல்லப் பிள்ளையானது.

கோகுலத்தில் தனது குழந்தையை நந்தகோபன் வீட்டில் வாசுதேவர் சென்றடைந்து அவர்களிடம் ஒப்படைக்கின்றார். நந்தகோபனின் மனைவி யசோதா தான் தாயாகி அவனை வளர்க்கின்றாள். சொந்தத் தாயாரை விட யசோதாவின் பெயர் தான் பிரபலம். இது பெற்றால் தான் பிள்ளையா? என்ற கருத்தைக் கொடுக்கிறது. கண்ணன் செய்த குறும்புகளை கண்டித்தும் அயலவர் கூறும் குற்றங்களை கேட்டு விசாரித்து அவர்களை சமாதானப்படுத்தியும் பட்டபாடு! இவை யசோதாவை தாயின் மேலாகவே காட்டுகிறது. ஐந்து வயதின் மேல் கோகுலத்திலிருந்து பிருந்தாவனத்தில் கண்ணன் வளர்ந்தான்.

**பிருந்தாவனத்தில் கிருஷ்ணபகவானை "பாங்கே பிஹாரி" என அழைக்கின்றனர்.**

**பாங்கே பிஹாரி கோவில்:**

பிருந்தாவனத்தில் இருக்கும் இக்கோயிலை நடந்தே சென்று தரிசித்தோம். ஒரே சனநெருக்கடி. காவி அணிந்த சாதுக்கள் அங்குமிங்குமாக திரிந்தார்கள். ஒரு சுவாமியார் ஏறக்குறைய தாடியுடன் நிர்வாணமாகக் காட்சியளித்தார். யாரும் பொருட்படுத்தவில்லை. செல்லும் வழியில் இருபுறமும் கடைகளும் ஆலய பூசைப் பொருள்களும், பலவர்ணங்களில் பூக்களும் நிறைந்து கண்கொள்ளாக் காட்சியாகவிருக்கின்றன. நாமாவளியும், பஜனை கீதங்களும் காது நிறையக் கேட்கின்றன. நாங்களும் பூவைக் கடையில் வாங்கிச் சென்றோம். கோயில் வாசலில் மணிகளும் தோரணங்களும் கண்ணைக் கவர்கின்றன. ஒரே சனக்கூட்டம். ஒருவாறு உட்சென்றோம். உள்ளே கிருஷ்ண பகவான்- பாங்கே பிஹாரியின் - சந்நிதி இருக்கிறது. கருமையான நிறத்தில் கிரீடமும் மயிர்ப்பீலிகளும் அணிந்த முடியுடன் கழுத்தில் மணிமாலைகள், பட்டுப் பீதாம்பரம் அணிந்த நீல உடையுடன் பரவசமாக தோன்றுகிறார் பகவான். கண்ணன் அழகில் மயங்காதவர் உண்டோ? நாமும் புஷ்பாஞ்சலி செய்து பிரசாதம் பெற்றுக் கொண்டோம்.

**கிருஷ்ண பலராம மந்திர்:**

இந்த அழகிய கோயில் சமீபத்தில் தான் கட்டப்பட்டது. இது தூய சலவைக் கல்லால் கட்டப்பட்டு மணிமண்டபம் போல் கவர்கிறது. இது ISKCON **(International Society for Krishna Consciousness)** என்ற சமூகத்தால் அமைக்கப்பட்டது. நாங்கள் சென்ற சமயம் வெண்புறா போன்று ஆங்கில யுவதிகள் வெண்ணுடை அணிந்து மீராபாய் போல் தம்புராவுடன் தூய்மையாக செல்வதை கண்ணுற்றோம். ஒரே பஜனையும், பூசையுமாக இருக்கிறது.

**யமுனை நதி:**

யமுனை நதி மதுராவையும் பிருந்தாவனத்தையும் அணைத்துக்கொண்டு செல்கிறது. இது புனித நதியாகும். கிருஷ்ணபகவானுடன் மிக நெருங்கிய தொடர்புடையது யமுனை ஆகும். அவரின் இளமைப் பருவம் ஆடல் பாடல் யாவும் இந்நதிக்கரையிலே பாவம் தீர்க்கும் இப் புண்ணிய நதியை பார்த்து அடைந்து நீரை எடுத்து தலையில் தெளித்தோம்.

**மதுரா:**

பிருந்தாவனத்தில் ஏகப்பட்ட கோயில்கள் உள. ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு கதையிருக்கும். கண்ணன் விளையாடிய இடம், கோகுலம், ராதா கிருஷ்ணா கோயில் என பல உள.

மதுராவில் தங்குவதற்கு ஹோட்டல், சத்திரங்கள், மண்டபங்கள் உள. எமக்கு தேவையான உணவும் சிற்றுண்டியும் பெறலாம். மதுராவை டில்லியிலிருந்து பஸ் மூலம் அடையலாம். புகையிரத மார்க்கமும் உளது.

**ஏகாதசி விரதம்:**
இது திருமாலின் ஒன்பதாவது அவதாரமான கிருஷ்ணருக்கு பிடிக்கும் விரதமாகும். விஷ்ணு கிருஷ்ண பக்தர்களுக்கு ஒரு சிறந்த நாள். விநாயகருக்கு சதுர்த்தி விழா போல, முருகனுக்கு சஷ்டி விழாபோல, திருமாலுக்கு ஏகாதசி அமைகிறது.
“காயத்திரிக்கு ஈடான மந்திரம் இல்லை” “ஏகாதசிக்கு சமமான விரதம் இல்லை” என்று சிலர் சொல்வர்.

ஏகாதசி என்பது ஒரு திதி. இது அமாவாசை (வளர்பிறை) அல்லது பௌர்ணமி வந்தபின் (தேய்பிறை) பதினொராவது (11)நாளில் வரும். ஆகவே மாதத்தில் சதுர்த்தி இரு முறை வரும்.

மார்கழி மாதம் வளர்பிறையில் வரும் ஏகாதசியை மோட்ச ஏகாதசி என்பர் அன்றைய தினம் உபவாசம் இருந்து கண்விழித்து நான்கு சாமத்திலும் விஷ்ணுவைப் பூசித்து மறு நாள் காலை பாரணம் செய்தல் வேண்டும். மோட்ச ஏகாதசி விநாயகரின் ஆவணி சதுர்த்தி போன்றதாகும்.

ஏகாதசி நாள்களில் விஷ்ணு கோயில்களில் திருவிழாக்கள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

“ஹரே கிருஷ்ணா ஹரே கிருஷ்ணா
கிருஷ்ணா ஹரே கிருஷ்ணா ஹரே”


## பிரித்தானியா சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தின்

### 13ஆம் ஆண்டு சைவ மாநாடு

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் ஆண்டுதோறும் நடத்திவருகின்ற சைவமாநாடு இவ்வாண்டு செப்டெம்பர் மாதம் 4ஆம் 5ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. “சைவ நெறியும் உலக அமைதியும்” என்ற தலைப்பு இவ்வாண்டு மாநாட்டின் கருப்பொருளாக அமைகிறது.

**04.09.10** **சனிக்கிழமை ஹைகேட் முருகன் ஆலயம்,**
**200 A, Archway Road, London, N6 5BA**
**05.09.10** **லூயிஷாம் இலண்டன் சிவன் கோயில்**
**4A, Clarendon Rise, London, SE13 5ES**

பழனி ஆதீனம் தவத்திரு சாது ஷண்முக அடிகளார்
பேராசிரியர் முனைவர் R கோபாலகிருஷ்ணன்,
இன்சொல் வாரிதி திரு மு பாலசண்முகன்
‘காந்தளகம்’ மறவன்புலவு திரு க சச்சிதானந்தன்
ஆகியோர் வந்து மாநாட்டை சிறப்பித்து ஆசியுரை, கருத்துரை வழங்குவார்கள்.



# கண்ணனும் தாத்தாவும்

-முத்து-

ஜனவரி, பெப்பிரவரி மாதங்கள் இலண்டன் மாநகரில் குளிரான மாதங்கள்தான். இந்த வருடம் மார்ச் மாதங்கூட வழக்கத்துக்கு மாறாகக் குளிராகவே இருந்தது. அதனால் தாத்தாவும் அதிகம் வெளியே செல்லவில்லை. எப்போது கொஞ்சம் வெய்யில் வரும் என்று காத்திருந்தார். ஏப்பிரல் மாதம் பிறந்த முதல் வாரம் சனிக்கிழமை காலை சூரியன் மிகவும் பிரகாசமாக வானத்தில் தோன்றினான். காலை உணவை முடித்தபின் தாத்தா கண்ணனுக்காகக் காத்திருந்தார்.

கண்ணன்: என்ன தாத்தா! மிகவும் சந்தோஷமாக இருக்கிறீர்கள்? ஏதாவது நல்ல செய்தி கேள்விப்பட்டீர்களோ?

தாத்தா: ஆமாம் கண்ணா! வானத்திலே பிரகாசமாகத் தோன்றியிருக்கும் சூரியன்தான் எனக்குப் புதுத் தெம்பையும் மகிழ்ச்சியையும் தந்திருக்கிறான். நானும் நீயும் இன்று வெளியே உலாவப்போகலாம் என்று செய்தி சொல்கிறான்.

கண்ணன்: ஆமாம் தாத்தா! எனக்கும் மனத்துக்கு மிகவும் உற்சாகமாக இருக்கிறது. வாருங்கள் பூங்காவரை போய்வருவோம்.

தாத்தா: உனக்காகத்தான் காத்துக்கொண்டிருந்தேன். வா கண்ணா! போவோம். (இருவரும் வெளியே சென்று நடைபாதையில் இறங்கி நடக்கிறார்கள்)

கண்ணன்: ஏப்பிரல் மாதமாகியும் மரங்கள் இன்னும் துளிர்க்கவில்லை. பூச் செடிகளும் இன்னும் பூக்கவில்லை.

தாத்தா: மரம், செடி, கொடிகள் எல்லாம் சூடான சூரியவெளிச்த்துக்காகக் காத்திருக்கின்றன. சூடில்லாவிட்டால் எதுவுமே வளராது.

கண்ணன்: அது ஏன் தாத்தா?

தாத்தா: உலகத்திலுள்ள மரம், செடி, கொடிகள் மட்டுமல்ல, மிருகங்கள், மனிதர்கள் எல்லாமே பஞ்சபூதத்தால் ஆக்கப்பட்டவை.

கண்ணன்: பஞ்சபூதம் என்றால் என்ன தாத்தா?

தாத்தா: நீர், நெருப்பு, நிலம், காற்று, ஆகாயம் என்னும் ஐந்தும் பஞ்சபூதங்கள்

எனப்படும். இதனை ஆங்கிலத்தில் five elements என்று சொல்வார்கள். இவற்றில் ஒன்று குறைந்தாலும் எதுவும் சீவிக்கமுடியாது.

கண்ணன்: அப்போ எங்கள் உடம்பிலும் எல்லாமே இருக்கு. அப்படித்தானே? நாங்கள் சுவாசிப்பதற்குக் காற்று வேண்டும். எங்கள் உடம்பில் நீர் இருக்கிறது, சூடு இருக்கிறது.

தாத்தா: ஆமாம் கண்ணா! நீ பெரியவனாகி விஞ்ஞானம் படிக்கும்போது மேலும் ஆராய்ந்து பார்க்கலாம்.

கண்ணன்: கேட்பதற்கு எல்லாம் புதுமையாகவும் சுவாரஸ்யமாகவும் இருக்கிறது. எல்லாவற்றையும் படித்தறியவேண்டும் என்று ஆவலாக இருக்கிறது.

தாத்தா: இன்றைக்கு வேறென்ன படிக்கலாம் என்று நினைக்கிறாய் கண்ணா?

கண்ணன்: நீங்கள் முன்னர் சொல்லித்தந்த தோடுடைய செவியன் என்ற தேவாரத்தின் கருத்தைச் சொல்லித் தாருங்கோ தாத்தா!

தாத்தா: சரி, சொல்லுகிறேன். கேள்! திருஞானசம்பந்தருக்கு கடவுள் எப்படிக் காட்சி கொடுத்தாரோ அந்தக் காட்சியைத்தான் சம்பந்தர் தகப்பனாருக்குச் சொல்கிறார். சிவபெருமான் தனது காதில் தோடு அணிந்திருக்கிறார். அழகிய காளை வாகனத்தில் உமையம்மையுடன் அமர்ந்திருக்கிறார். வெண்மையான பிறைச் சந்திரனைத் தலையிலே சூடியிருக்கிறார். சுடுகாட்டிலுள்ள சாம்பலைத் தன் உடல் முழுவதும் பூசியிருக்கிறார். அவருடைய இந்த அழகான தோற்றம் என் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. என்னுடைய மனதைக் கொள்ளைகொண்ட கள்வன் இந்தச் சிவபெருமான். இவர் பிரமதேவர் முன்பு வந்து வணங்கியதும் பெருமை மிக்கதுமான திருத்தோணிபுரத்தில் பத்தர்களுக்கு அருளும்வண்ணம் எழுந்தருளியிருக்கிறார்.

கண்ணன்: எப்படித் தாத்தா! மூன்று வயதுக் குழந்தையாகிய ஞானசம்பந்தர் இப்படி அழகான தேவாரத்தைப் பாடினார்? நம்பவே முடியவில்லை.

தாத்தா: எல்லாம் ஆண்டவன் அருள்தான் கண்ணா! அவன் அருளால் எதுவும் நடக்கும். ஆண்டவனே உலகத்தைப் படைத்து, காத்து, அழித்தலையும் செய்து பின் மறைத்தல், அருளல் என ஐந்து தொழில்களையும் செய்கிறார். இங்கே ஞானசம்பந்தருக்குக் காட்சி கொடுத்தது மட்டுமல்லாமல் ஞானப் பாலையும் கொடுக்கிறார். அதனாலேதான் அவருக்கு இப்படிப் பாட முடிந்தது.

கண்ணன்: இன்னும் நூற்றுக்கணக்கான பாடல்களைப் பாடி, பல அற்புதங்களையும் செய்ய முடிந்தது. இல்லையா தாத்தா?

தாத்தா: ஆமாம் கண்ணா! ஆண்டவன் அருள் கிடைத்தால் எதையும் சாதிக்கலாம். அதனாலேதான் 'அவன் அருளாலே அவன்தாள் வணங்கி' என்று சிவ புராணத்தில் ஒரு வரியில் கூறுகிறார் மணிவாசகர்.

கண்ணன்: எனக்கும் அந்த வரி ஞாபகம் வருகிறது. அதற்கு என்ன பொருள் தாத்தா?

தாத்தா: கடவுளைப் பத்தியோடு கும்பிடவும் அவனுடைய அருள் இருந்தால் மட்டுமே முடியும் என்பது அதன் கருத்து.

கண்ணன்: 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்று நீங்கள் முன்பு சொல்லித் தந்ததுவும் இதுவும் பொருத்தமாகத்தான் இருக்கிறது.

தாத்தா: கெட்டிக்காரன்! முன்னர் படித்ததை மறக்காமல் ஞாபகம் வைத்திருக்கிறாய். நல்லது. சம்பந்தர் வரலாறு மட்டுமல்ல, மற்றைய மூவரான அப்பர், சுந்தரர், மணிவாசகர் வாழ்க்கையிலும் சிவபெருமான் வந்து அவர்களை ஆட்கொண்டதாகக் கூறப்படுகிறது. அதனாலேயே அவர்கள் சிறந்த பத்திப் பாடல்களைப் பாடினார்கள்.

கண்ணன்: ஆமாம் தாத்தா. நால்வர் பள்ளியில் சமயபாடம் படிக்கும்போது அவர்கள் வரலாற்றையும் படித்திருக்கிறேன்.

தாத்தா: எங்கே ஒரு சம்பவம் சொல் பார்ப்போம்.

கண்ணன்: தாத்தா, மணிவாசகர் பாண்டிய மன்னன் ஆணைப்படி குதிரை வாங்கச் செல்கிறார். வழியிலே, அவரை ஆட்கொள்ளவென சிவபெருமான் திருப்பெருந்துறையில் ஒரு குருந்தமர நிழலில் குரு வேடம் தாங்கி, சீடர்கள் சூழ இருக்கிறார். அவரைக் கண்டதும், தாயைக் கண்ட குழந்தைபோல மணிவாசகர் ஓடிச்சென்று அவர் பாதங்களை வணங்கி அங்கேயே அமர்ந்து விடுகிறார். தான் குதிரை வாங்க வந்ததை மறந்து இறைபக்தியில் ஆழ்ந்து விடுகிறார்.

தாத்தா: நல்லது. கெட்டிக்காரன். அப்பொழுதுதான் பிடித்தபத்து என்ற திருவாசகப் பாடல்களைப் பாடினார். அதிலிருந்து பல திருாசகப் பாடல்களையும் தொடர்ந்து பாடினார்.

கண்ணன்: இப்போது சுந்தரரை எப்படி ஆட்கொண்டார் என்று நீங்கள் சொல்லுங்கோ தாத்தா.

தாத்தா: தாத்தாவுக்கு வயதாகிவிட்டதே! மறந்துவிட்டாரா அல்லது ஞாபகம் வைத்திருக்கி-றாரா என்று சோதித்துப்பார்க்கிறாயா? குறும்புக்காரன்!

கண்ணன்: இல்லை தாத்தா, நீங்கள் சொல்லும் விதத்தில் ஓர் அழகு இருக்கிறது. அதை நான் இரசித்துக் கேட்பேன். அதற்காகத்தான்.

தாத்தா: சரி, சரி. எனக்கு 'ஐஸ்' வைக்காதே, கேள். சுந்தரர் மணமேடையில் இருக்கிறார். மணப்பெண்ணுக்குத் தாலி கட்டவேண்டிய வேளையில் சிவபெருமான் ஒரு கிழப் பிராமணர் வடிவில் வந்து சுந்தரரைப் பார்த்து நீ என் அடிமை. ஆனபடியால் திருமணத்தை நிறுத்தவேண்டும் என்று சொல்கிறார். சுந்தரர்

ஆத்திரமடைந்து, ஒரு பிராமணன் இன்னொரு பிராமணனுக்கு அடிமையாகும் வழக்கம் இருக்கிறதா? உனக்குப் பித்தம் பிடித்துவிட்டது என்று திட்டுகிறார்.

கண்ணன்: எனக்கு மீதி தெரியும். 'பித்தா' என்று ஆரம்பித்து தன்னைப் பாடுமாறு சிவன் சொல்கிறார். அதன் பின்னர் சுந்தரரும் பல கோயில்கள் சென்று பல தேவாரங்கள் பாடினார்.

தாத்தா: அப்பர் என்று சொல்லப்படும் திருநாவுக்கரசரையும் ஆண்டவன்தான் ஆட்கொண்டார் என்று உனக்கு முன்பு சொல்லியிருக்கிறேனே! நினைவு இருக்குத்தானே கண்ணா!

கண்ணன்: ஆமாம் தாத்தா, சைவ சமயத்தை விட்டு, சமணத்தில் சேர்ந்தவரை நினைத்துக் கவலை கொண்ட அவருடைய அக்கா அப்பரைச் சைவத்துக்கு மீளவரும்படி செய்யுமாறு இறைவனை வேண்டுகிறார். ஆண்டவனும் அப்பருக்குச் சூலை நோய் கொடுத்து ஆட்கொண்டார்.

தாத்தா: 'கூற்றாயினவாறு விலக்ககிலீர்' என்ற தேவாரத்தை அந்த வேளையில் அப்பர் பாடினார். இப்படியே ஆண்டவன் தன் அடியார்களைத் தானே தேடிவந்து ஆட்கொண்டதற்கு நிறையக் கதைகள் உண்டு கண்ணா! நாங்கள் பேசிக்கொண்டே வந்ததில் தூரம் தெரியவில்லை. பூங்காவுக்கே வந்துவிட்டோம். நீ போய்க் கொஞ்சநேரம் விளையாடிவிட்டு வா. நான் அதுவரை இங்கு இருக்கும் பெரியவர்களுடன் பேசிக்கொண்டு இருக்கிறேன்.

கண்ணன்: சரி தாத்தா! அதோ! அங்கே என்னுடைய நண்பர்கள் சிலர் பந்து விளையாடிக்கொண்டு இருக்கிறார்கள். நான் அவர்களுடன் அங்கே கொஞ்சநேரம் விளையாடிவிட்டு வருகிறேன்.

# VEGETARIANISM - GOD'S ORIGINAL PLAN

**God blessed them (man and woman) and said to them, "Be fruitful and increase in number; fill the earth and subdue it. Rule over the fish of the sea and the birds of the air and over every living creature that moves on the ground."**

**Then God said, "I give you every seed-bearing plant on the face of the whole earth and every tree that has fruit with seed in it. They will be yours for food.**

**And to all the beasts of the earth and all the birds of the air and all the creatures that move on the ground—everything that has the breath of life in it—I give every green plant for food." And it was so.**

**Genisis 1- 28,29,30**

**நன்றி: வண. டேவிட் ஞானப்பிரகாசம்**

# திருக்குறள் கற்போம்

## இறைமாட்சி

## On Kingly Excellence

படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு

படை, குடி, உணவுப்பொருள், அமைச்சு, நட்பு, அரண் என்றும் ஆறு உறுப்புகளையும் உடையவனே அரசர்களுள் அரிமா போல்வான்
He who possesses these six things, an army, a people, wealth, ministers, friends, and a fortress, is lion among kings.

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு

மனத்திண்மை, கொடை, அறிவு, ஊக்கம் என்னும் இந்நான்கினையும் இடைவிடாது பெற்றிருத்தலே அரசர்களுக்கு இயல்பாம்
Never to fail in these four things, fearlessness, liberality, wisdom and energy, this is the kingly character.

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு

விரைந்து செயற்படல், கல்வி, உண்மையினை ஆராய்ந்து தெளிதல் என்றும் இம்மூன்றும் நிலத்தினை ஆளும் அரசனுக்கு நீங்காதிருத்தல் வேண்டும்
Vigilance, learning and bravery, these three things, should never be absent from the ruler of a country

அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு

அறநெறியினின்றும் வாழுவாமல் நெறியல்லவற்றை நீக்கிப் போர் வீரத்திலும் வழுவாத பெருமையுடையவனே அரசன்
He is a king who, with manly modesty swerves not from virtue and refrains from vice.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு

பொருள் வருவாய்க்குரிய வழிகளைச் செய்தலும் அதனைத் தொகுத்தலும் அதனைப் பிறர்கொள்ளாமல் காத்தலும், காத்தவற்றை மக்கள் நலனுக்காக வகுத்தளித்தலும் வல்லவனே அரசன்.

He is a king who is abl to acquire (wealth), to lay it up, to guard, and to disribute it.

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்

குடிமக்கள் நேரில் காணுமாறு எளியவனாய், எவரிடத்தும் கடுஞ்சொல் கூறாதவனாய் இருப்பின், நாட்டு மக்கள் அவனைப் பிறநாட்டு மன்னரினும் புகழ்வர்
The whole world will exalt the country of the king who is easy of access, and whose words are whithout harshness.

இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு

இனியசொற்கூறி ஈதலைச் செய்து துன்பம் நேராமல் காக்க வல்ல அரசனுக்கு இவ்வுலகம் அவன் ஏவற்படி நினைத்தது போலவே நடக்கும்
The word will praise and submit itself to the mind of the king who is able to give with affability, and to protect all who come to him

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்

நெறி பிறழாமல் முறை செய்து பிறர் வருந்தாமல் காக்கும் அரசன் குடிமக்களுக்கு கடவுள் என்று உலகோரால் மதித்துப் போற்றப்பெறுவன்.
That king will be esteemed a god amon men,who performs his own duties, and protects (his subjects)

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு

செவிக்கு இன்னாத சொற்களைப் பிறர் வகூறினும் அவற்றை பொறுத்துக் கேட்கும் பண்புடைய அரசனின் குடை நீழற்கீழ் உகம் தங்கும்
The whole world will dwell under the umbrella of the king who can bear words that embitter the ear.


கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி

பிறர்க்கு வேண்டுவன கொடுத்தல், அருள், நல்லாட்சி, குடிகாத்தல் என்னும் நான்கினையும் உடையான் அரசர்கட்குக் கதிரவனாவான்.
He is the light of kings who has these four things: beneficence, benevolence, rectitude and care for his people.

தமிழ்: முனைவர் இரா சாரங்கபாணி English: Rev Drew & John Lazarus

## Hinduism in search of answers...

# HINDU SCRIPTURES



### *What are the Hindu Holy books?*

Authoritative Hindu religious literature is divided into two main categories. **Sruti** – literally: "that which has been heard" and,

**Smrithi** – literally: "that which has been remembered"


**Sruthi** has the connotation of 'revelations', 'truth' in an unquestionable sense, norms of belief and practice.

**Smrithi** bases its authority on the standing of the writer to which it is attributed, authoritative only to the extent to which it conforms to Sruthi.

## SRUTHIS / VEDHAS

Vedhas are the oldest scriptures in the world. These are texts that have religion, philosophy, ethics, science and literature all rolled into one. The word Veda is derived from the Sanskrit root 'vid', which means 'to know' and means Knowledge. Other names for Vedhas are SRUTHIS meaning 'heard' and not composed. Vedhas were breathed out by God, and heard and realised by ancient Rishis. These Saints are DRISHTAS – Seers not composers of Vedhas. The holy men passed on the Vedhas from generation to generation using mnemonic systems to preserve them. Sage Vyas (who is often called Vedha Vyas) who later compiled

Mahabharata and 18 Puranas, classified the Vedhas into Rig, Yajur, Sama and Adharva(na) vedhas. Vyasa taught Rig Veda to Paila, Yajur Veda to Vaishyampayana, Sama Veda to Jaimini and Adharvana Veda to Sumanta, who were his disciples. **Samhita** is the name given to the collection of the vedhas in the mantra form.



- **Rig Vedha** –Vedha of hymns, or verses – provides mantras, the sacred formulae that are indispensable and unchangeable - Underlies path of Gnana – knowledge. It is said to be the oldest. These were composed at least 5000 years ago. Contains 10 books (mandalas) on informations of performance of sacred fire rituals. There are 21 sections. There are about 1028 hymns or suktas. The Rig Vedha Samhita has been referred to as "the oldest book in the world" with some justification. These are very difficult to interpret. The famous hymns from Rig Vedha that are chanted in most of the homes are 'Purusha Shukta: (Rig-veda 10.7.90.1-16)

Verse 1:
**sahasra SIrshA purusha: | sahasrAksha: sahasrapAt |**
**sa bhUmim vishvato vRtvA | atyatishTad daSAngulam || 1 ||**

(sahasra) Thousands (SIrshA) of heads has (purusha:)
the great being. (sahasra) Thousands of (aksha) eyes has he,
(sahasra pAt) and thousands of legs. (sa) He (vRtvA)
manifests (bhUmim) the world. (atyatishTat) He stands
beyond (daSAngulam) the count of ten fingers

With uncounted heads
Uncounted eyes, and
Uncounted feet, He
Moves, as all of
Creation
Verily is He

Uncountable.
Beyond the grasp
Of the hands of men.

Verse 2:
**purusha evedaGM sarvam | yad bhUtam yac ca bhavyam |**
**utAmRtatvasyeshAnaH | yad annenAtirohati || 2 ||**

(purusha) purusha (eva) alone (idam sarvam) is all of this, (yad bhUtam) that which was, (yac ca bhavyam) and that which is too be. (uta) Moreover (amRtatvasya) of immortality too (IshAna) is he alone Lord. (yad) That which (annena) as food (atirohati) shows itself, that too is purusha.

That which is,
Was, and is to be.
All of this
Is he alone..
And the eternal,
Beyond all end,
He is Lord,
Alone, of that.
The world is food..
That which hides,
And ventures forth,
He is that too.

and **'Gayatri Mantra'**. (Yajur Veda Mantra 22/9,30/2,36/3 Saam Veda Mantra 1462 and Rig Veda 3/62/10)

**Om Bhur Bhuva Suvah**

**Tat Savithur Varenyam**

**Bhargo Devasya Dheemahi**

**Dhiyo Yonah Prachodayat**

**Meaning:** We meditate on that most adorable, most desirable and most enchanting luster (effulgence) of our supreme Lord, who is our

creator, inspirer and source of eternal Joy. May this light inspire and illumine our intellect (and dispel the darkness).

**[Word Meaning**: Aum: The primeval sound (from which all sounds emerge); Dheemahi: We meditate upon; Varenyam: the most adorable, most desirable or most enchanting; Bhargo: luster or effulgence; Tat: of that; Devasya: supreme (Lord); Savitur: from whom all creations emerge (also means the Sun God who is our life source); Bhur: who is our inspirer; Bhuvah: who is our creator; Suvaha: who is the abode of supreme joy; [Bhur, Bhuvah and Suvaha are also considered to mean three lokaas or worlds namely Heaven, earth and lower worlds]. Yo: May this light; Prachodayaat: inspire/illumine; Naha: our; Dhiyo: intellect (activities of the intellect)]



**The Maha Mrityunjaya Mantra** (Rigveda 7.59.12 and Yajur Veda 3.60)**:**

OM

Triyambakam yajaamahe

Sugandhim pushtivardhanam,


Urvaarukamiva bandhanaan

Mrityormokshiya maamritaat.

Summary of the Maha Mrityunjaya Mantra:


We worship Shiva - The Three-Eyed (tryambakam) Lord (yajamahe); Who is fragrant (sugandhim) and nourishes (pushti) and grows (vardhanam) all beings. As the ripened cucumber (urvarukamiva) is automatically liberated (bandhanaan) (by the intervention of the "farmer") from its bondage to the creeper when it fully ripens; May He liberate us (mokshiya) from death (mrityor), for the sake of immortality (maamritaat).

- **Yajur vedha** –Vedha of rituals – instructions of ceremonies to be followed - Uderlines the path of Karma – action. Contains short prose formulae called white Sukla Yajurvedha and verses – Mantras called black Krishna Yajurvedha. and of 109 sections. It is also called book




of sacrificial prayers.

- 
- **Sama Vedha** – Vedha of melodies - Underlines the path to Bhakti – devotion. Books of songs (chants) based on Rig vedha with instructions for recitation. There are 1000 sections of 1810 hymns,



which are meant to me sung at Sama –sacrifice

- **Atharva(na) Vedha** – Vedha of incantations and spells recognised only later contains a motley collection of spells and incantations, largely outside the scope of yajna - Synthesis of the three Vedhas above. Collection of hymns and formulae, it consists 50 sections



For easier comprehension of each of the four Vedhas, Maharishis have further classified them into 2 major parts **(Mantra Samhita and Brahmanas).** Brahmanas include 2 further sub-parts **(Aranyakas and Upanishads)**

- **MANTRA SAMHITA** consisting of original texts comprising collection of suktas, hymns, incantations, formulae and litanies.

- **BRAHMANAS** (Explanations) form commentaries and interpretations of Samhitas. If the Mantras comprise the hymns, the Brahmanas contain liturgies in prose. Voluminous writings deal with explanations of sacrifices. They also contain early versions of myths that were explained in later centuries.

- **ARANYAKAS** (Interpretations): forest texts – composed and studied in forest dwellings are the interpretations of Vedas. Teachings no longer relating to sacrifice and ritual. The Aranyakas teach about meditations based on symolical interpretations of the liturgical rites. *Some of the Aranyakas are combined with Upanishads.*

- **UPANISHADS** (Essence of Vedhas) are secret doctrines and much of ancient Indian thoughts and wisdoms. These are the concluding part of Vedas, and also called 'Vedanta' – 'end of vedha'. These are esoteric texts designed to teach the means of liberation from rebirth and all suffering. **They form the foundation of Hinduism**.

The word Upanishad means 'sitting down near'; i.e. sitting down near a teacher so as to hear his words of wisdom from his own lips. They are in the form of conversations between teacher/pupil, father/son, Guru/disciple etc., passed on orally over generations. The Upanishad may roughly be classified as philosophical treatises dealing with the ultimate problems of life.

The most important of the 1080 Upanishads are: ISA, KENA, KATHA, PRASANA, MUNDAKA, MANDUKYA, AITERAYA, TAITTIRIYA, CHANDOGAYA, BRIHADARANYAKA, KAUSHTAKA, SVETASVATARA, MAITRAYANI

**VEDHA**

| | | | | |
|---|---|---|---|---|
| **Samhita:** | Rig | Yajur | Sama | Atharva |
| **Brahmanas:** | Aitereya (Asvalay | Tandya Sadvimsa | Tattiriya Satapatha | Gopatha |
| **Aranyakas:** | Aitareya Kausitaki | | Brahadaran ayaka | |
| **Upanishads:** | Aitareya Kausitaki | Kena Chanogya | Taittriya Isa, Katha | Prasna Mundaka |

Edited by Siva A nanthan



# WESTERN
## JEWELLERS

*Jewellers & Gem Merchants*

230,UPPER TOOTING ROAD
LONDON SW17 7EW
**PHONE : 020 8767 3445**

# SILK EMPORIUM

122 UPPER TOOTING ROAD LONDON SW17 7EN
**PHONE : 020 8672 1900**

# WESTERN
## JEWELLERS & TEXTILES

5, PLAZA PARADE, 29-33, EALING ROAD,
WEMBLEY, MIDDLESEX HA0 4YA.
**PHONE : 020 8903 0909**



**OPENNING HOURS**
**Monday to Saturday**
**10.00am - 6.30pm**
**Sunday 11.00am - 5.30pm**



இலண்டனில் வாசன் அச்சகத்தினரால் (தொலைபேசி : 020 8646 2885) வடிவமைத்து, அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 08-08-2010 அன்று வெளியிடப்படுகிறது.

COMMERCIAL & INDUSTRIAL GUARDING
CALL NOW FOR A FREE SURVEY AND QUOTATION

SECURITY GUARD WANTED

* RETAIL
* CONSTRUCTION
* 24 HOUR RADIO PATROLS
* KEY HOLDING
* ACCESS CONTROL
* CCTV

# CHARTER SECURITY

A PROFESSIONAL SERVICE EVERY TIME

1ST FLOOR
CAMBRIDGE ROAD
BARKING
ESSEX
1G11 8NR

TEL: 020 8507 7717
FAX: 020 8507 7702